# கிராமியக் கலைகள்

கவிஞர். முருகு தயாநிதி

Divisional Secretary
Manmunai South West
Paddiruppu

# கிராமியக் கலைகள்



கவிஞர். முருகு தயாநிதி

# முன்னுரை

கலைகள் மனிதனைப் பூரணப்படுத்துகின்றது. அதாவது பழி பாவங்கள் அற்ற உலகிற்குக் கொண்டு செல்கின்றது. கூத்துக்கள் பல நூறாண்டு பழமைவாய்ந்தவை. எனினும், கடந்த 350 ஆண்டுகளில் அதன் வரலாற்றை, வளர்ச்சியை நாடகநூல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. கூத்துக்கள் தமிழ் இலக்கியமரபில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ் நாடக வளர்ச்சியில் மூன்று திருப்பங்கள் ஏற்பட்டன. இத்திருப்பங்களுக்குச் சங்கரதாஸ் சுவாமிகள் *(1867 -1922)*, பம்மல் சம்பந்தமுதலியார் *(1873-1964)*, பரிதிமாற்கலைஞர் *(1870-1903)* ஆகிய மூவரும் காரணமாக அமைந்தனர்.

இவர்கள் நாடகங்களை எழுதி, இயக்கி ஊருராகச் சென்று நடித்துவந்தனர். இருபதாம் நூற்றாண்டில் நாடகங்கள் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்துகின்றன.

இலங்கைத் திருநாட்டினைப் பொறுத்தவகையில் கூத்துக்கலை சிறப்பான இடத்தினை வகித்துவருகின்றது. அவை பிரதேசத்திற்குப் பிரதேசம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து, வடபாங்குக் கூத்து, தென்பாங்குக் கூத்து, கொட்டகைக் கூத்து போன்றவைகளாகும். இக்கூத்துக்கள் விடிய விடிய ஆடப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் நாடகக்கலை சிறப்புப் பெறுகின்றது. அந்த வகையிலே கலைநிகழ்வு என்ற அடிப்படையில் பல்வேறு நிகழ்வுகள் மேடையேறு கின்றன.

அம்பிலாந்துறைக் கலைப்பூக்கள் கலைக்கழகம் 1990ஆம் ஆண்டு வைகாசி மாதம் 12 திகதி ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகத் தலைவராக இறைபதமடைந்த இ.தவராசா அதிபர் அவர்கள் இருந்தார். அந்தக்காலம் தொடக்கம் நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருகின்றன. அதாவது, மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டு வருகின்ற கழகம் என்றால் அது கலைப்பூக்கள் கலைக் கழகத்தினையே சொல்ல

முடியும் என எண்ணுகின்றேன். கலைநிகழ்வுகள் பல்வேறு விதமாக தயார் செய்யப்பட்டு மேடையேற்றப்படுகின்றன. புராணநாடகம், நாட்டுக்கூத்து, நவீனநாட்டுக்கூத்து, கரகம், கும்மி, தாளலயம், பாட்லு க்கான அபிநயம் என்ற வகையில் கலைநிகழ்வுகள் அமைகின்றன. அண்ணளவாக ஒரு இரவுக்கு 4 - 5 மணித்தியாலங்களுக்கு நிகழ்ச்சிகள் தயார் செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டு வருகின்றன. மேடை மூன்றுபக்கம் அடைக்கப்பட்டிருக்கும். பார்வையாளர்கள் ஒரு பக்கம் இருந்தே நிகழ்ச்சிகளைப் பார்க்கமுடியும்.

இவ்வாறான நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதில் நான் பெரும்பங்காற்றி வருகின்றேன். அவ்வாறான நிகழ்ச்சிகள் அடங்கிய ஆவணங்கள் பல இருந்தபோதும் அவற்றில் சில வேறு கிராமங்களில் உள்ள கலைக்கழகங்களுக்கு கொடுத்தபோது சில கைநழுவிப்போயுள்ளன. சில காணாமல் போயுள்ளன. மீதியாகக் கிடைத்தவற்றையே இங்கு பதிப்பித்துள்ளேன். அவை அணைத்தும் என்னுடைய சுய ஆக்கங்கள் ஆகும். இந்த ஆக்கங்களில் பெரும்பாலானவை அன்றைய கால சூழ்நிலையில் புரையோடிப்போயுள்ள பல்வேறு கருப்பொருள்களை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். இத்தகைய ஆக்கங்களில் கும்மி, கரகம், தாளலயம், நவீனநாட்டுக்கூத்து, சுண்டல் மசாலா என்று பலவகை நிகழ்வுகளை அக்கால சூழ்நிலைக்கு ஏற்றாப்போல் சமூகசீர்திருத்தமாக எழுதி நடித்துள்ளோம். பெரியவர்கள், சிறுவர்கள் என்று பலர் இந்த நிகழ்வுகளில் பங்கு பற்றுவார்கள். இந்த நிகழ்ச்சி சிறப்பாக இடம்பெறுவதற்குப் பெற்றோர்களும் மற்றவர்களும் ஆக்கமும் ஊக்கமும் அளிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் ஆலயத் திருவிழாக்களை அடிப்படையாகக் கொண்டு இடம் பெறும் இந்த நிகழ்வுகள், எமது கிராமம் கடந்து வேறுகிராமங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு நடிக்கப்பட்டு வருவது வழக்கமாகும். அதிபர்கள், ஆசிரியர்கள், அரச தொழிலில் உள்ள மற்றவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், ஏனைய பொது மக்கள் என்று பலர் நடித்து வருகின்றனர். நான் இக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலந் தொடக்கம் நடித்து வருகின்றேன். நடிப்புத்துறையில் 35 வருடங்கள் கடந்தும் உள்ளேன். தற்காலத்தில் கலைப்பூக்கள் கழகத்தினுடைய தலைவராகவும் இயக்குனராகவும் செயற்பட்டும் வருகின்றேன்.

இந்த ஆக்கங்களைப் பதிப்பிக்கவேண்டும் என்கின்ற எண்ணம் பல நாட்களாக இருந்தபோதும் அவற்றுக்கான முயற்சி எதுவும் செய்யப்படாமலே இருந்தது. தியாகராசர் கல்லூரியினுடைய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் இ.பேச்சிமுத்து ஐயா அவர்கள் ஒருமுறை என்னைப் பற்றிக் கூறும்படி கேட்டுக்கொண்டார். அப்போது கூறிய விடயங்களில் ஒன்று என்னுடைய ஆக்கங்கள் பற்றியதாகும். அவர் உடன் என்னிடம் கூறிய ஒருவிடயம் இதனைப் பதிப்பிக்க வேண்டும் என்பதாகும். இந்தியா செல்லும்போது திரும்பவும் ஞாபகப்படுத்துவார். அதேபோல் பேராசிரியர் செ.யோகராசா அவர்கள் இவ்வாறான ஆக்கங்கள் பதிப்பிக்கப்பட வேண்டிய அவசியத்தினையும் தெளிவுபடுத்தியிருந்தார். அதேபோல் இறைபத மடைந்த எனது குருநாதர் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் அவர்கள் எனது ஆக்கங்களைப் பார்த்து வாழ்த்தி அது பதிப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு மட்டும் அல்லாமல் 2012ஆம் ஆண்டு கண்டியில் இருந்து எனது கிராமத்துக்கு வந்து நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு கழகத்தினை வாழ்த்திச் சென்றார். எங்களுடைய கலைப் பூக்கள் கலைக்கழகத்தின் பலரும் கழகத்தினுடைய ஆவணமாகப் பதிப்பிக்கப்பட வேண்டும் என்று ஊக்கப்படுத்தினர். இவ்வாறான பலருடைய வேண்டுதல்களுக்கிணங்க இதனைப் பதிப்பிக்கின்றேன். அவர்கள் யாவருக்கும் எனது நன்றிகள் உரித்தா கட்டும்.

முருகு.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | கிராமியக் கலைகள் |
| ஆசிரியர் | : | முருகு தயாநிதி |
| உரிமை | : | திருமதி தயாநிதி சாரதாதேவி |
| முதற்பதிப்பு | : | 2018 |
| வெளியீடு | : | சோஜயஹரி |
| பக்க வடிவமைப்பு | : | முருகு தயாநிதி |
| அட்டை வடிவமைப்பு | : | ஹரி அச்சகம் வெள்ளவத்தை |
| தாள் | : | 80 GSM |
| நூலின் அளவு | : | A5 |
| பக்கங்கள் | : | 84 |
| விலை | : | 250.00 |

| | | |
|---|---|---|
| **Title** | : | Kiramiya Kalaikal |
| **Author** | : | Murugu Thayanithy |
| **Copy Right** | : | Thayanithy Sarathadevi |
| **First Edition** | : | 2018 |
| **Publisher** | : | Shoyayahari |
| **Lay Out** | : | Murugu Thayanithy |
| **Cover Disign** | : | Hare Printers, Wellawatta |
| **Paper** | : | 80 GSM |
| **Page** | : | 84 |
| **Price** | : | 250.00 |

உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| மாரியம்மன் கும்மி | - | 1 |
| மாரியம்மன் கரகம் | - | 3 |
| முத்துமாரியம்மன் கும்மி | - | 5 |
| சிவமுத்துமாரியம்மன் கரகம் | - | 7 |
| மாரியம்மன் கும்மி | - | 9 |
| மாரியம்மன் வாழ்த்துக் கும்மி | - | 11 |
| கல்வியின் பெருமை | - | 13 |
| சிவனார் பெருமை | - | 15 |
| படித்தால் முன்னேறலாம் | - | 17 |
| *SMS* கலாட்டா | - | 21 |
| லீசிங் மாத்தையா | - | 23 |
| முயற்சி உயர்ச்சி தரும் | - | 27 |
| வெளிநாடு வேண்டாம் | - | 29 |
| ஆதியூர் அம்பிலாந்துறை | - | 31 |
| அவுஸ்ரேலியாப் பயணம் | - | 33 |
| பொறுப்புணராப் பாண்டாட்டி | - | 41 |
| வியாபாரியின் கைவரிசை | - | 46 |
| துருபதன் | - | 51 |
| கிருட்டிணன் தூது | - | 62 |
| தான்தோன்றும் அப்பன் | - | 63 |

## மாரியம்மன் கும்மி

தந்தனத்தான தனதான தன
தான தந்தனத் தானானா
தந்தனத்தான தனதான தன
தான தந்தனத் தானானா

ஆதியூர் அம்பிலாந்துறைதனிலே
அவதரித்தவளே மாரியம்மா
சோதியுருவாக நின்றவளே
சொல்லின் செல்வியே எங்களம்மா

பண்டுபரவனி கூறுகின்ற
பழம்பெரும் பதியில் வந்தவளே
தொண்டுகள் செய்கின்றோம் உனக்காக
பங்கமில்லாமல் காருமம்மா

கூடுதுநேரம் ஏறுதுகும்பம்
ஆடுதுதெய்வம் ஓடுதுதுண்பம்
நாடுது இன்பம் தேடுதுசெல்வம்
பாரது சிறக்குது மாரியம்மா

ஆடியில் நீயும் வருவாயம்மா
தேடிய செல்வங்கள் தருவாயம்மா
காவடியில் நாங்கள் வந்தபோதும்
காவலனாகவே நிற்பாயம்மா

அடியவர் எங்களைக் காருமம்மா
அடிமை வாழ்வை உடையுமம்மா
மிடியில் இருந்து விலக்குமம்மா
விடிவெள்ளிபோல் வாருமம்மா

ஒற்றுமையாக இருப்பதற்கு
ஒரு குடையாக நீ வருவாயம்மா
ஒற்றுமை தன்னைக் குலைப்பவரை
ஓங்கியறைந்து காருமம்மா

பற்றுக்கள் உம்மீது உண்டம்மா
தொற்று நோயைக் விலக்குமம்மா
நற்றமிழ் தன்னைக் காருமம்மா
சொற்பொருளே எங்கள் மாரிமுத்தே

ஏழைகள் வாழ்வை உயர்த்துமம்மா
கோழைகளுக்கு உதவுமம்மா
காளைகளை நீயும் காருமம்மா
வேளைக்கு வருவாய் மாரியம்மா

தீயில் இறங்கி வருவதற்குத்
தெம்புதனையும் தந்திடுவாய்
ஓய்வின்றி ஒழிவின்றி வாழ்வதற்கு
நோயின்றி எங்களைக் காருமம்மா

சக்கதிக்குச் சத்தியே மாரியம்மா
சங்கார சக்தியே நீயம்மா
சித்தி புத்திதனைத் தருவாயம்மா
சிவமுத்துமாரியே எங்களம்மா

கலைப்பூக்கள் கலைக்கழகம் உனக்காக
காலந்தோறும் ஒருகரகம்
மலைபோல துண்பம் வந்தாலும்
மறக்காமல் வைக்கும் மாரியம்மா

## மாரியம்மன் கரகம்

தந்தனத்தான தனதானா தன
தான தந்தனத்தானானா
தந்தனத்தான தனதானா தன
தான தந்தனத்தானானா

சித்திவிநாயகர் சீர் பெருகும்
சிறந்தநல் அம்பிலாந்துறைப் பதியில்
சிவமுத்துமாரியின் அருளுடனும்
சிறக்குதே கலைப்பூக்கள் கலைக்கழகம்

மாகோனின் அரசாட்சி நடக்கையிலே
உலகநாச்சியின் வருகையின் முன்
மலர்ந்தது அம்பிலாந்துறையூரும்
மகிழ்வாக இருக்கிறோம் உன்னருளால்

மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில்
முதன்முதல் கண்டது நம்கிராமம்
வன்னிமை ஆட்சி இடம்பெறவே
தன்னிலை கண்டதும் எம்கிராமம்

மட்டக்களப்பு மாரி வழிபாட்டில்
முதலாக உதித்தது கொத்துக்குளம்
மறுவருடமே நம்மூரில்
மாரியும் அமர்ந்தாளே மகிழ்வாக

காவடி கற்பூரச் சட்டியென்று
ஏந்தி வருவோமே அடைக்கலமாய்
காத்தருள வேண்டும் மாரியம்மா
கண்ணிமைபோல் எங்களையும்

மாரித்தாயே மனக்குறையை
மண்ணுள்ளவரையும் தீர்க்க வேண்டும்
மக்களையும் காக்க வேண்டும்
மண்றாடுகின்றோம் உம்மையுமே

பத்திரத்தின் நாயகியே
உத்தமியே தாயே சிவமுத்துமாரி
பாவவினை நீக்கிடம்மா
பத்தர்களையும் காத்திடம்மா

கலைப்பூக்கள் கலைக்கழகம் வாழ வேண்டும்
கலைகள் யாவுமே சிறக்க வேண்டும்
அழகு கலைகள் தனைப்படைத்து
அகிலம் எல்லாமே உயரவேண்டும்

# முத்துமாரியம்மன் கும்மி

தன்னானத் தனனானே தன
தன்னானேத் தனனானே
தன்னானத் தனனானே தன
தன்னானேத் தனனானே

முத்துமாரி வாழும் பூமி - இது
முத்தமத்தாய் விளைகிறது
தீராத நோய் தீர்த்து தித்திக்கும் செயல்களால்
பார்போற்ற நிற்கின்றது

அடியார்கள் வருவார்கள் - இங்கு
அம்மன் குறை போக்கிடுவாள்
அம்பிலாந்துறையூரில் அமர்ந்து - அம்மன்
அகிலம் ஆண்டிடுவாள்

ஆயிரம் கண்ணுடையாள் - அம்மன்
ஆனைத்துக்கும் காவலாவாள்
ஆணவம் கொண்டவரை அழித்து - அம்மன்
அவணியை ஆண்டிடுவாள்

ஓடிவா அம்மா என்றால் நம்மை
நாடியே வந்திடுவாள்
கொடிய நோய்தீர்த்து துன்பத்தைப் போக்கி
விடிவைக் காட்டிடுவாள்

அரசாண்ட பூமி இது - இங்கு
அம்மன்குடி கொண்டுள்ளாள்
திரிசூலம் உடுகெடுத்து  தீராத வினை தீர்த்து
பேயோட்ட வைத்திடுவாள்

நேர்த்திக்கடன் வைத்தாலே - நமக்கு
நிம்மதி தானாய் வரும்
பார்ப்பவரும் பலன் பெறுவார்
பார்வதியின் சடங்கினிலே

தீக்குழியில் இறங்கினால் - தேவி
தீராத வினை தீர்ப்பாள்
பாற்குடம் எடுத்தாளே பார்வதி அவளும்
பணிவோடு இரங்கிடுவாள்

கலைப்பூக்கள் கலைக்கழகம்
கலைகள் பல படைக்கின்றது
நிலையாக நின்று நீண்டு குலையாத பயணத்தில்
தலைசாய்த்து வணங்கிடுவோம்

## சிவமுத்தமாரியம்மன் கரகம்

தந்தனத்தான தன தானா தன
தான தந்தனத்தானானா
தந்தனத்தான தன தானா தன
தான தந்தனத்தானானா

சித்தி விநாயகர் சீர்பெருகும் - இங்கு
சிவமுத்துமாரியின் அருள் பெருகும்
பண்டைய பூமியாம் துறையூரில்
பாதம் பணிவோம் பரனருளால்

எத்தனை எத்தனை இன்னல்கள்
எங்களை வந்து வாட்டினாலும்
அத்தனையும் அறுத்து அம்மையுமே
எத்திசையும் ஆள இங்கிருப்பாள்

ஆதி சத்தியாய் அகிலமாண்டு
ஆணவம் அடக்கிய அம்மையே நீ
பேசாப் பொருளையும் பேசவைத்து ஆன்ம
பிணிதீர்க்கவந்த மாரிமுத்தே

தாமரை மலரிலும் நீ வருவாய் - வேப்பம்
தளிரிலும் குழையிலும் நீ வருவாய்
கூப்பிடும் போதெல்லாம் நீவருவாய் - நம்ம
குலதெய்வமல்லோ மாரிமுத்தே

முத்தேவியாக நீ வந்து - உலக
மூர்க்கமடக்கிய முதற்பொருளே
சத்தியே சித்தியே பார்பதியே - எங்கள்
பாவவினைகளைப் போக்கிடுவாய்

ஆதியே சோதியே ஆணிமுத்தே - எங்கள்
அம்பிலாந்துறையூரில் அமர்ந்தவளே
அகிலாண்ட நாயகி அம்மையே - நம்ம
சிவமுத்துமாரியைப் போக்கிடுவோம்

உம்மை நாங்கள் நினைத்ததுமே - எங்கள்
உள்ளத்தில் உறைவாயே உத்தமியே
மண்ணையும் காத்துத்தான் மாரிமுத்தே - எங்கள்
கண்ணையும் காத்தாயே கண்மணியே

நினைத்தவர் நெஞ்சிலே நீயிருப்பாய் - அந்த
நித்திலத்தில் எங்கும் உறைந்திருப்பாய்
நிம்மதியாக வாழ்வதற்கு - எங்கள்
நீலியே சூலியே நீகாப்பாய்

# மாரியம்மன் கும்மி

தனதனதனனானா தனந் தன
தனதனதனனானா
தனதனதனனானா தனந் தன
தனதனதனனானா

மாரியே எங்கள் தாயே - உன்னை
மன்றாடி வணங்குகின்றோம்
நோய்பிணி தீர்த்து நீ - எம்மை
வாய்விட்டுச் சிரிக்க வைப்பாய்

எம்மினம் சந்தித்த இடர்களை - நீ
என்றுமே போக்கிடுவாய்
கேட்டதைக் கொடுத்திடுவாய் - எப்போதும்
கேடுகளை அழிப்பாய்

கூக்குரல் சத்தம் கேட்டால் - நீயோ
கூட இருந்திடுவாய்
ஏக்கம் தீர்த்திடுவாய் - அம்மா
ஏழ்மைகளை அழிப்பாய்

சொத்துக்களை இழந்தோம் - அம்மா
சொந்தங்களைப் பிரிந்தோம்
எத்தனை போனாலும் - உம்மை
என்றும் மறக்கமாட்டோம்

துண்பங்கள் வந்தபோதும் - தாயே
உண்ணையே வேண்டி நிற்போம்
மின்னல் வேகத்தில் வந்து - நீ
மிடுக்கை அகற்றிடுவாய்

எத்தனை வடிவமம்மா - நீயே
எத்திசையும் நிற்பாய்
பொல்லா வினையழிக்க - தேவி
பொங்கி எழுந்திடுவாய்

ஆத்தாளே எங்கள் தாயே - அம்மா
ஆறுதல் எங்களுக்கு
கதவு திறந்ததும் - ஊருக்குள்
சிதைவு இல்லையம்மா

கெட்ட கனவெல்லாம் உன்னாலே
தட்டுத்தடுமாறுமம்மா
கொட்டம் அடக்கிடுவாய் தாயே
கொடுமை அழித்திடுவாய்

உன்னை நம்பியோரை ஒருபோதும்
கைவிட மாட்டாயம்மா
கேட்டதைக் கொடுத்திடுவாய் - தாயே
கெடுவினை தனைஅழித்திடுவாய்

பூசாரி சின்னத்தம்பி அவர் முன்னோர்
அமர்த்தினார் உன்னையம்மா
சடங்கு நடக்கிறதே அவர் வழி
ஆலயம் சிறக்கிறதே

கலைப்பூக்கள் கலைக்கழகம் - தாயே
ஒவ்வொரு வருடமும்
உனக்கோர் கலை படைக்கும் - அம்மா
கலைஞர்களைக் காப்பாய்

# மாரியம்மன் வாழ்த்துக் கும்மி

தந்தனத்தான தன தானா தன
தான தந்தனத்தானானா
தந்தனத்தான தன தானா தன
தான தந்தனத்தானானா

சிவமுத்துமாரியே வேண்டுகின்றோம் - எங்கள்
சத்தியன் தவராசா மோட்சத்திற்கு
நித்திலத்தில் பெயர் நிலைக்கவேண்டும்
சத்தியநாயகம் வாழவேண்டும்

தவராசா வாழ்வை சொல்லப்போறோம் அவர்
பிரயத்தனத்தை உரைக்கப்போறோம்
கலைப்பூக்கள் கலைக்கழகத் தலைவனை - நாம்
காத்திரமாகவே போற்றிருந்தோம்

எங்கே கண்டாய் மகளே எங்கே கண்டாய் - நம்ம
தலைவனை எங்கே கண்டாய்
புன்சிரிப்புடன் உலா வருகின்ற
பண்பாளனை நீயும் எங்கே கண்டாய்

தொண்ணூறில் நியமனம் பெற்றாரம்மா
தொல்லைகள் யாவும் கடந்ததம்மா
மாவடிமும்மாரி வால்கட்டெடன்று
மகிழ்வுடன் சேவை செய்தாரம்மா

அம்பிலாந்துறைப் பள்ளியிலே
பிரதி அதிபராய் இருந்தாரம்மா
எம்பிள்ளை வளர்க்கச் சேவை செய்து
தன்பிள்ளை மறந்து நின்றாரம்மா

இந்து இளைஞர் தலைவரம்மா - அவர்
முந்தும் சமூக முன்னோடி
சந்து பொந்தெல்லாம் சேவை செய்து
பிந்தி வந்ததைக் கண்டேனம்மா

கலைப்பூக்கள் கலைக்கழகத் தலைவனாய்
கலைவளர்க்ககும் காவலனாய்
மேடையில் நின்றதைக் கண்டு - நான்
மெய்மறந்து சிரித்தேனம்மா

காலையில் பள்ளிக்குச் செல்வாரம்மா - அவர்
மாலையில் திரும்பி வருவாரம்மா
மணிமக்களைக்கூட மறந்து அவர்
கடமையில் இருந்து தவறாரம்மா

புல்பூண்டுகளுக்கு நீரூற்றி - அவர்
நல்ல சேவை செய்து வந்தார்
மாணவர்களைத் தேற்றித்தான் - அவர்
மகத்தான பணி செய்தாரம்மா

கைகேசி வந்து பாய்ந்ததனால்
கைகொடுக்க யாரும் இல்லையாமே
தலைகுனிந்து அவர் இருந்தாராமே
தலைவிதி மாறிப் போனதாமே

மோட்டர் சைக்கிளில் அவர் சென்றாராமே
றோட்டில் பலர் பார்த்தாரம்மா
சிவன் கோயிலில் வலம் வந்தாரம்மா
சிரித்த முகத்துடன் போனாரம்மா

செத்தார் என்று கேட்டு மகள் - நம்ம
தேகமெல்லாம் கண்ணீர் விட்டதடா
தேவர்கள் கண்ணீர் சொட்டவே
இறுதியடக்கம் நடந்ததடா.

தவராசா வாழ்வு மாறாது - நம்ம
தவப்பெருமகன் நிலைத்திடுவான்
சதிகாறர் எல்லாம் தலைகுனிவார்
நீதி என்றும் அழியாது.

# கல்வியின் பெருமை

(தாளலயம்)
தானனன்னத் தனனனன்ன தானனன்னன்னா தன
தானனன்னத் தனனனன்ன தானனன்னன்னா
தானனன்னத் தனனனன்ன தானனன்னன்னா
தானனன்னத் தனனனன்ன தானனன்னன்னா

என்னசெய்வோம் ஏது செய்வோம் மாரித்தாயே
என்ட புள்ள பள்ளிக்குத்தான் போய் வருகிறான்
கொப்பி வாங்கவும் அவனுக்குக் கஷ்டம்
புரு'ங்காறனும் குடித்து அழிக்கிறான்

அம்மா நானும் பள்ளிக்குத்தான் போகவேணும்
அப்பா இன்னும் வேலைக்குப் போகவில்லையா
தப்பாமலே நான் படிக்க வேணும்
ஒப்பாருமில்லை எனது படிப்புக்கு

ஆறு கடந்து உழைத்துத்தானே நானும் வருகின்றேன்
சேறு பூச வேணாண்டி நீயும்தானடி
சோறு போடுவேன் உனக்குத்தானே
சொட்டும் அடிப்பேன் எனக்குத்தானே

என்ன மனிசா நீயும் இப்போ கதைக்கிறகத
நம்ம புள்ள படிக்கிறான் நாடு போற்றுமே
குடிய விட்டுத்தான் குடிய உயர்த்தோனும்
படிபல தாண்ட பள்ளி செல்லோனும்

வேலை செய்து காசுளைக்கும் கட்டழகன்டி
வேதனைக்கு காட்டுப்போட வேணுந்தான்டி
சோதனைவந்தால் ஒதுக்கித்தள்ளுவேன்
சோம்பறியல்ல ஒன் புருஷன்டி

உழைக்கும் காசை சேமித்தால் உயர்ந்துவிடலாம்
புழைக்கத்தெரிய வேணும் உனக்குத்தானே
நிலைப்பதற்குத்தான் யோசிக்கவேணும்
சளைப்பு பார்க்காமல் உழைக்கவேணும்

ஒரு சோறு தின்பதுவும் கஷ்ரந்தானே
ஒரு சாண்தறகூட இல்ல நமக்குத்தானே
வெட்டுமிசினும் வந்திருக்குது
வேலையைமாற்றி உழைக்கவேணும்

காலைமடித்துப்போட்டு நீயும் கதை சொல்லுவா
காலமெல்லாம் கஷ்ரப்பட வேனும் நானே
மாலையாகினால் மனசுக்கு சங்கடம்
மாலைகூடதான் எனக்கு இல்லையே

கதையைவிடு மனிசி நீ யோசிக்கிறேனே
காரணங்கள் சரியாக இருக்குதானே
புரிய வைத்தாயே இந்த மண்டைக்கு
சரி நானுந்தான் போய்வருகின்றேன்

## சிவனார் பெருமை

(கோலாட்டம்)
தன்னானத் தனனானே தன
தன்னானேத் தனனானே
தன்னானத் தனனானே தன
தன்னானேத் தனனானே

சிவனாரின் பூமி இது - இங்கு
சிவலோகம் தெரிகின்றது
தீராத நோய் தீர்த்து தித்திக்கும் செயல்களால்
பார்போற்ற நிற்கின்றது

போர்த்துக்கேயர் வந்தாரே - நம்ம
சிவனாரைப் பழித்தாரே
கல்லுப் புல்லுத்தின்னுமா என்று கேட்டு
குருக்களை வெருட்டினாரே

மறுவெள்ளி வாருங்கோ - இங்கு
கல்லுப்புல்லு தின்னுமென்றார்
சிவனாரை மன்றாடி வாக்குப்பெற்று அவர்தான்
திடமாக இருந்தாரே

இந்தா கந்தா என்றாரே - கல்நந்தி
வாலைச் சுருட்டி ஓடி வந்தது
போர்த்துக்கேயர் ஓடினார் புறமுதுகு காட்டி
சிவனாரின் எழுச்சியினால்

அடியார்கள் வருவார்கள் இங்கு
சிவன்குறை போக்கிடுவார்
கொக்கட்டியூரிலே அமர்ந்த அவரும்
கொடுமை அழித்திடுவார்

ஆலகாலநஞ்சுண்டவர் அவர்
அனைத்துக்கும் காவலானார்
ஆணவம் கொண்டவரை அழித்து - அவரும்
அண்டத்தை ஆண்டிடுவார்

ஓடிவா இறவைா என்றால் நம்மை
நாடியே வந்திடுவார்
கொடிய நோய் தீர்த்து துண்பத்தைப் போக்கி
விடிவைக் காட்டிடுவார்

நேர்த்திக்கடன் வைத்தாலே நமக்கு
நிம்மதி தானாய் வரும்
பார்ப்பவரும் பலன்பெறுவர் பரமசிவன் தேரை
பரலோகம் சென்றிடுவார்

தேர் வடம் பிடித்தாலே நமக்கு
தீராத நோய் தீரும்
பாற்குடம் எடுத்தாலே பரமசிவன் நமக்கு
பணிவோடு இரங்கிடுவான்

தேரோடும் பூமி இது - நம்ம
சிவனாரின் சன்னிதியிது
வடம்பிடித்தால் திடமாவோம் கரம்பிடித்து நின்றிடுவோம்
தான்தோன்றும் பதியினிலே

ஆவணித் திதியில் தேரோடும் - அதற்கு
அகிலமே கண்விழிக்கும்
தேரோட்டக் கோயிலென்று பேர்பெற்ற நம்மபதி
பார்போற்ற நிற்கின்றது.

## படித்தால் முன்னேறலாம்

**(தாளலயம்)**
ஆகாகா ஆகாகா ஆகாகா
ஓகோகோ ஓகோகோ ஓகோகோ
ஆகாகா ஆகாகா ஆகாகா
ஓகோகோ ஓகோகோ ஓகோகோ

கொள்ளிவெட்டப் போக நீயும் புறப்படுகா
பிள்ளைதானே பள்ளியில படிக்கிறாங்கா
காசுகட்ட வேனுங்கா மாதா மாதம் அவன்
கஷ்டத்தை உணர்ந்துதான் படிக்கிறாங்கா

என்ன செய்வோம் நம்ம நிலைமை இதுவாச்சே
நல்லாத்தானே படைத்திருக்கான் நம்மபிள்ளையும்
கால்கை இருக்கும் வரை உழைப்போமே - நாம்
கள்ளத்தனம் இல்லாமல் நடப்போமே.

நம்ம பிள்ளைக்குத் தெரியுந்தானே வீட்டுக் கஷ்டம்
நல்லாத்தானே படிக்கிறான் என்னுறாங்க
தேவையுனர்ந்து செலவு செய்றான் அவன்தானே
பேற்றோர் சொல்லைக் கேட்டிடுவான் நம்ம பிள்ளை

**தெந்தினோ தெந்த நாதந்தநானே**
**தெனதென்னோ தென்ன நாதந்தனானோ**

அம்மா நான் ஓயல் பாஸ்பண்ணி விட்டேன்
அடுத்துநான் ஏயல் படிக்கப்போறேன்
விஞ்ஞானப் பிரிவில் கற்பேன் பாரு
வியத்தகு டொக்டராய் ஆவேன் பாரு

கஷ்டத்தை உணர்ந்து படித்தால் அம்மா
கடவுளும் நமக்கு உதவுவார் பாரு
ஊர் சுற்றித் திரிந்தால் ஊதாரி ஆவேன்
ஊக்கமும் நமக்கு வராதம்மா

கஷ்டந்தான் நமக்கு இருக்கு மகனே
வெட்டுவேன் நானும் கொள்ளி பாரு
வேளைக்கு நானும் காசு அனுப்ப
வேதனைவிட்டு உழைப்பேன் பாரு

மகனே நீதான் படிக்கவேனும்
அம்மாவும் அதற்கு உதவுவார் பாரு
கைப்பிடி அரிசி சேகரித்து
காசுதான் நானும் அனுப்புவேன்பாரு

அம்மா நானும் போய் வருகின்றேன்
அடுதரெண்டு ஆண்டுக்குப் பின்னர்
கம்பஸ்போக தகுதி பெறுவேன்
க'டத்தை கடவுள் பார்ப்பாரம்மா

**ஆகாகா ஆகாகா ஆகாகா**
**ஓகோகோ ஓகோகோ ஓகோகோ**
**ஆகாகா ஆகாகா ஆகாகா**
**ஓகோகோ ஓகோகோ ஓகோகோ**

நம்ம மகன் ஊர்சுற்றும் ஊதாரியல்ல
நாலுபேரைப் போலுதானே நடந்திடுவான்
காதலித்து கலிசறவேல பார்க்கமாட்டான்
கண்டநிண்ட இடமெல்லாம் போகமாட்டான்

கஷ்டம் உணர்ந்து படித்தால்தான் முன்னேறலாம்
கடவுளுந்தான் உதவுவார் எப்போதும்
மக்களையும் படிப்பிக்க வேணுமே - பெற்றோர்
பெருமையாக வாழ்வதற்கு அது போதும்

மகன் தந்தைக்காற்றும் உதவி என்னவென்றால் - அவர்கள்
மக்களவையில் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும்
இவன் தந்தை என்னோற்றான் கொல்லென்றால்
இமயம் வரையும் புகழ்பரப்ப போதுந்தானே.

**தெந்தினோ தெந்த நாதந்தநானே**
**தெனதென்னோ தென்ன நாதந்தனானோ**

அம்மா நான் ஏயல் பாஸ்பண்ணிவிட்டேன்
கம்பசும் எனக்குக் கிடைத்திருக்கு
கடவுள்தான் நமக்கு கண்விழித்தார்
உதவிட நமக்கு மாஹபொல உண்டு

வறுமைதான் கல்விக்குத் தடையே இல்ல
பொறுமையாய் இருந்தால் அதுவே போதும்
திறமையாய் நாம் படித்திட்டால்தானே
மு்றையாக நாம் பெறலாம் பட்டம்

ஆகாகா ஆகாகா ஆகாகா
ஓகோகோ ஓகோகோ ஓகோகோ
ஆகாகா ஆகாகா ஆகாகா
ஓகோகோ ஓகோகோ ஓகோகோ

நம்ம புள்ள கம்பஸ்போய் விட்டான்
நாலுதேசம் போற்றுந்தானே பாருங்க.
நாவடக்கம் இருக்கவேணும் எல்வோருக்கும்
மாணவர்க்குக் கட்டாயம் வேணுமது

என்ட மகன் சொன்னவாத்தை நிறைவேற்றினான்
கண்டநிண்ட களிசறவேல பார்க்கல்ல
கஸ்ரப்பட்டு உழைத்த காசை கண்ணியமாய்
செலவு செய்ய வேனுந்தானே எல்லோரும்

**தந்தானின தானினதான தனதானின தானினா**
**தந்தானின தானினதான தனதானின தானினா**
**தந்தானின தானினதான தனதானின தானினா**
**தந்தானின தானினதான தனதானின தானினா**

அம்மா நான் டொக்டராய் ஆகி விட்டேன் இப்போது
சும்மா நான் சேவை செய்வேன் ஏழைகளுக்கு எப்போதும்

சந்தோசமாக இருக்கு சரித்திரத்தை மாற்றிவிட்டான்
தந்தாளே அம்மாளும் தங்க மகனை எங்களுக்கு

கொள்ளி விற்கப்போகும் போது மாரியை நினைத்துச் செல்வேனே
அள்ளிப்புசிய திருநீற்றாள் அருளை எமக்குத் தந்தாவே

அம்மாளை நம்பியவர் சீர்பெறுவார் உலகினிலே
சீற்றம்தனை மறந்து சிவமுத்துமாரியை வணங்கிடுவோம்

பெற்றோர் சொல் கேட்டதாலே பேர்பெற்றேன் நானும்டொக்டராக
கற்றோராய் மாறுவதற்கு கண்ணியமாகவே இருக்கவேணும்

சிவமுத்துமாரியைப் போற்றிஅருள்பெறுவோமே இப்போது
சிரித்த முகத்துடனே சீர்பெற்று வாழ்வோம் எப்போதும்

## SMS கலாட்டா

(தாளலயம்)

என்டழகப்போ எனக்கொரு SMS வந்திருக்கு
சும்மா இருந்தவன் சூட்டக்கிளப்புறான்
சாமானும் இருக்காம் என்றுதான் சொல்லுறான்
வேணாம் என்றாலும்விடுறான் இல்ல
வேணும் வேணுமென்று திரும்பவும் அனுப்புறான்.

என்னடி புள்ள கதைக்கிற கத
றோங் நம்பர் என்று அனுப்பு இப்ப
கண்ட நின்ட நேரம் இதைக்கதையாக
புள்ளகுட்டி இரக்கென்று சொல்லடி புள்ள

வீக்வீக் என்று கத்துத போனு
விறுவிறென்று எனக்கு ஏறுது
கிடுகிடென்று உடம்பு நடுங்குது
பாடபடென்று அனுப்போனும்போல

என்னென்னவென்று அனுப்புறான் புள்ள
ஏங்கியும் நீயம் தவிக்கிறாய் இப்ப
கொம்மைக்கு நானும் அனுப்பியதுபோல
கோர்வைக்கொடியாய் இருக்குதா புள்ள

வண்ண வண்ணமாய் செய்திகள் யாவும்
வகை வகையாய் இருக்குது அப்பா
சொன்னால் உனக்கு சோக்காய் இருக்கும்
மண்ணாகிப்போவாய் வாழ்வைத் தொலைத்து

ஆசையாய் இருக்கு அவனைக் காண
ஆனாலும் மனசு தடுக்குதுபாரு
ஆராக இருக்குமோ அவன் என எண்ணுது
ஆட்டிப்படைக்குத இந்த SMS

இரவிலும் வருது பகலிலும் வருது
சரிசாமத்திலும் வீக் வீக் என்னுது

போர்வைக்குள்ளும் புகுந்து உதறுது
நாவையும் வறளச் செய்யுது அப்பா

கெட்ட கனவெல்லாம் விட்டுத்து ஓடுது
கொட்டுக்கொட்டென்று மனசு இருக்குது
தட்டுத்தடுமாறி நடக்கத் தோனுது
வெட்ட வெளியில நட்டுக்களறுது

என்னோட நிலைய தெரியாது அப்பா
சொன்னாலும் உனக்குப் புரியாது அப்பா
என்னன்னவோ இப்ப தோனுது அப்பா
முன்னப்போல இப்பல்ல அப்பா

அவனை எண்ணி நீ அலட்டிக் கொள்ளாத
கவனத்தை நீயும் கவனமாய்ப்பாரு
தவணைபோடாத கணவன் இருக்கான்
தட்டுக்கெட்டவனாக இருப்பான் புள்ள

SMS அனுப்பினான் றிப்ளே பண்ணல்ல
அதனால் அப்ப ஆளைள கோள் பண்ணுறான்
என்னால இனி இருக்கவும் ஒன்னா
ஓடுறென் அப்பா ஒன்றும் நினையாத

என்ட புள்ள இப்ப விட்டுத்து ஓடித்தாள்
SMS ஆளைள கோள் செய்த சதியால
சொன்னசொல் கேட்காமல் ஓடியே பெயித்தாள்
என்னமாதிரியோ இப்ப இருக்கு

உங்கள் சொல் கேட்காமல் ஆளைள கோள் பண்ணினன்
அதனால் இப்ப நிற்கன் தெருவில
கொஞ்ச நாள் என்னை வச்சிருந்துபோட்டு
நடுத் தெருவில விட்டுத்து ஓடித்தான்

SMS நம்பி போகக் கூடாது
ஆளைள கோளை நம்பியும் போகக் கூடாது
கண்டுக்காமலே இருக்கவும் வேணும்
நம்பியேபோனால் நிற்கனும் தெருவில

## லீசிங் மாத்தையா

**(தாளலயம்)**

**விருத்தம்**

சிந்தனை இல்லாமல் சிறுசிறு ஆசைகொண்டு
முந்தானையில் இருந்ததனை முழுமையாய் விற்றுவிட்டு
எப்படி எப்படியோ வாகனம் என கனவுகள் பல கண்டு
எத்தனையோ குடும்பங்கள் இன்னல் பட்டு உழல்கின்றன
லீசிங்கை நம்பினார்கள் ஓசியாய் உழைக்கலாமென்று
வாசியும்போய் விட்டது வாய்விட்டு அழுகின்றார்கள்
காசியும் இல்லாமல் குடம்பத்தில் சண்டை மூண்டு
கண்கானாத் தேசம்போக வருகுது நிலைமைதானே.

**தந்தாக தாகதாக ததிங்கினத்தோம் தாகதாக**
**தந்தாக தாகதாக ததிங்கினத்தோம் தாகதாக**

லீசிங்கு வந்திருக்கு ஈசியாய் எடுக்கலாமே
காசியும் குறையத்தானே ஓசியும் இருக்கிறது.

ஓன்றுக்கு ஒன்றிருக்கு ரெண்டுக்கும் ஒன்றிருக்கு
துண்டு துணிக்கும் போடலாம் லீசிங்

ஆட்டோ மெசினெற்று அழகான வாகனமும்
றோட்டிலே சொகுசாய் போய்வர சூட்டிக்கப்பு

இரிக்க காசைக் கொண்டு வாங்கோ இல்லாட்டியும் பறவாயில்ல
வளவு வாய்க்கால் உறுதியிருந்தா வரக்குள்ளகொண்டுவாங்கோ

ஒப்பந்தம் சும்மா செய்ய அரசாங்க உத்தியோகம்
பார்கின்ற ஒருவரை மறந்திடாமல் கொண்டுவாங்கோ

வட்டியும் மிகக் குறைவு குட்டியும்போடாது
பெட்டியும் புதுப்பெட்டி கட்டிலும் இருக்கிறது

கனவு வாகனம் பெற பட்டென்ன லீசிங்போடு
மறுகனமே வளவில் நிற்கும் மாற்றுக்கதை இங்கு இல்ல

லீசிங்கிக்கு லீசிங்கு வாசிக்கு வாசியும்
அங்க இங்க போகாதங்க நமக்குள்ளே நீங்க வாங்க

ஓடிஓடி நீங்க வாங்க ஒப்பீசிக்கு நீங்க வாங்க
தடவித்தடவி எடுத்திடுங்க தரமான வாகனத்தை

அனுமதிப்பத்திரத்தை அடமானம் வைப்பதற்கு
அவற்றுக்கு வேற லீசிங் அடுக்கடுக்காய் இருக்கிறது.

**நன்னன்ன நன்னன்னனா நன்ன**
**நானன்ன நானன்னனா**
**நன்னன்ன நன்னன்னனா நன்ன**
**நானன்ன நானன்னனா**

நம்பாதங்க லீசிங்க நம்பி
ஏமாறாதங்க வாழ்வில்
கழுத்துப்பட்டி அணிந்து நம்மட
கழுத்தை அறுக்க வாறார்
ஏமாந்த வாத்தை சொல்லி
எங்களை ஏழைகள் ஆக்கவாறார்
கோழைகளாக்கியெம்மை
அவங்க கோடீஸ்வரர் ஆகின்றார்

பட்டப்பகலில் கொள்ளை இவங்க
பண்பாகச் செய்கிறாங்க
வாசற்படியில் வந்து எங்களை
மோசஞ்செய்யப் பாக்கிறார்
தெட்டத் தெளிவில்லாட்டி நம்ம
திட்டமெல்லாம் பாழே
பாசமும் போகிறது குடும்ப
நேசமும் போகிறது.

பொறுமையாய் கதை சொல்லி எங்களை
வெறுமையாய் ஆக்குறாங்க
பொருளாதாரச் சுரண்டல் இவங்கட
பொய்யான வாத்தைக்கு
ஆசையைக் காட்டிடுவார் எங்களை
அடமானம் வைத்திடுவார்
குடும்பச் சண்டைக்கு இவங்க
நிலைக்களமமைத்திடுவார்

ஆங்காங்கு ஒப்பீஸ் வைத்து நம்மளை
வாங்ங வாங்க என்றிடுவார்
ஆக்களுக்கும் லீசிங் அவங்க
பாக்காமல் போட்டிடுவார்
ஆசையைக் காட்டியங்கே நம்மளை
அடமானம் வைத்திடுவார்
அதுக்குள்ள போகாதங்க நீங்க
மடுபடடுப் போகாதங்க

மெல்ல மெல்லச் சுரண்டி எங்களைப்
பள்ளத்தில் தள்ளுகிறார்
நல்லவர்போல் வந்து நம்மளை
நாசம் செய்யப் பார்க்கின்றார்
கொள்ளையார் இவர்களல்லோ
பலவாறு கொள்கை உரைத்திடுவார்
பெண்களையும் பார்ப்பார் சிலநேரம்
கண்களையும் அடிப்பார்

குடும்பத்தில் சண்டை வரும் சிலநேரம்
நிரந்தரப் பிரிவும் வரும்
முன்னுள்ள செத்தையெல்லாம் விற்று மண்ணாகப்போகவரும்
பெண்ணையும் இழக்கவரும் பூர்வ
மண்ணையும் இழக்கவரும்
ஊன்மையை மறைக்கவரும் நம்ம
உயிரையும் இழக்கவரும்

மாடுகள் விற்கவரும் பொண்டாட்டி
மாலைய விற்கவரும்
தோடுகள் இல்லாமல் நமக்கு
தொல்லைகள் தானாய் வரும்
கோடுகள் பார்க்ககவரும் கொடுங்
கோண்மைகள் உண்டாகும்
காட்டில் அலையவரும் கண்டவர்
காறியும் தப்பவரும்

நல்ல பொருளாதாரம் இங்கு நம்மிடமிருந்தது
கவுண்டியை எடத்தோமே நாங்க
றவையையும் எடுத்தோமே
சுனாமியை எடுத்தோமே நாங்க
சூட்டிக்கப்பும் எடுத்தோமே
கவுண்டது பொருளாதாரம் இங்கு
புரண்டது பொய்புரளி

பொண்டாட்டியை இழந்தார் பொன்னான
பொன்னையும் இழந்தார்
பொத்திப் பொத்தி உழைத்த பொருளான
பொருளையும் இழந்தார்
காலமெல்லாம் கண்ணீர் இவருக்குக் கரைபுரண்டோடுகின்றது
கழுத்துக்கும் கயிறு சிலநேரம் கட்டாயம் வரலாம்.

## முயற்சி உயர்ச்சி தரும்

(நவீன நடனம்)
பள்ளிக்கு நீங்க போக வேனும் - அங்கு
பண்பாண பாடங்கள் கற்ற வேனும்
துள்ளிவிளையாடி வரவேனும் - நீங்க
தூரதேசம்போக முனையவேனும்

ஏழ்மைய நீங்க ஒதுக்கவேணும் - என்றும்
ஏழை வாழ்க்கையை வெறுக்கவேணும்
பாசாங்கு செய்வதை மறுக்க வேணும் - நம்ம
போசாக்குள்ள உணவை உன்னவேணும்

ஏழாம் எட்டாம் வகுப்பு படித்துப்போட்டு - நாம்
வேளாமை வெட்டப் போகக்கூடாது
ஓயல் ஏயல் தடை தாண்டி - நாம்
ஓப்பீஸ் வேலையும் பார்க்கவேணும்

வெளிநாடு போனால் உழைக்கவேணும் - அங்கு
வீணான செலவைத் தவிர்க்க வேணும்
கள்யானம் கட்ட வயசு வேணும் - நீ
க'ரப்பட்டு உழைத்து உயரவேணும்

மேலுமேலும் நீதான் படிக்கவேணும் - என்றும்
மேல்நாடுபோக நினைக்கவேணும்
குாட்டைவெட்டி களனியாக்கி வளப்படுத்தி -அதில்
மேட்டு நிலப் பயிரையும் செய்யவேணும்

கட்டார் சவுதி என்று நீ போனால் - அங்கு
கட்டாயம் நிதம் நிதம் உழைக்கவேணும்
போட்டி சட்டி என்று போடக்கூடாது - உன்
பொருளாதாரத்தை அழிக்கக்கூடாது

காதல் கூதல் கூட உனக்கு வரக்கூடாது - நீ
கண்டநிண்ட செலவு செய்யக்கூடாது
நல்ல நண்பனை இணைத்துக்கொண்டு - நீ
நாலா தேசமும் செல்லவேணும்

அம்மா அப்பா சொல் கேட்டு நடக்கவேணும் - நீ
அடுத்தவர் கதையை மதிக்கவேணும்
பொல்லாங்கை அகற்றி நடக்க வேணும் - வாழ்வில்
பொய் சொல்லி வாழ்வதைத் தவிர்க்கவேணும்

பிச்சைபெற்று வாழ்வதை ஒதுக்கவேணும் - நாம்
மிச்சம் பிடித்து வாழ்வை உயர்த்த வேணும்
கச்சை கட்டி வாழ்வில் உயரவேணும் - என்றும்
நச்சரித்த வாழ்வை வெறுக்கவேணும்

பல்கலைக்கழகம் போனால் - அங்கு
பற்பல பட்டங்கள் முடிக்கவேணும்
வெற்றியும் நீங்க பெறுவதற்கு - என்றும்
கற்றறிந்தாருடன் ஒழுகவேணும்

இத்தனை வழிகளைச் சொன்னோமே - நீங்க
அத்தனைபேரும் கேட்டீர்களே
வாழ்க்கையில் முன்னேற ஒருவழி - அது
சொல்வதைக் கேட்டு நடப்பதுதான்

# வெளிநாடு வேண்டாம்

(தாளலயம்)
என்டல்ல லாத்தாவே - இனி
வேனாங்கா வெளிநாடு
ஐந்து வருஷமாய் கட்டாரில் இருந்திட்டன்
ஐம்பசம் காசும் இல்லம போச்சு
மாடுபோல் உழைத்து இடுப்பு உடைந்தேன்
மக்களை இழந்து மனமுமுடைந்தேன்

கடல் கடந்துநான் கட்டார் போனேன்
கட்டிய புருஷனும் வெட்டியும் விட்டான்
பிள்ளையும் நின்றது தொல்லைகள் சூழ
கட்டாரில் நானும் பட்டேனேபாடு

காலையில் எழுவேன் கஷ்ரப்பட்டு
மாலைவரையும் மாடாக வேலை
ஓடுபோல் தேய்வேன் ஒவ்வொரு வேலைக்காய்
ஓடிவரவே எண்ணுவேன் நானும்

வீட்டு வேலைக்கு அங்குதான் போனேன்
காட்டுமாடுபோல் கஷ்ரப்பட்டேன்
கொள்ளியாப்பேய்களுக்கு அவித்துப்போட்டேன்
கல்நெஞ்சம் தாங்கியே காலங்களித்தேன்

போமனும் அங்கு கஷ்ரப்படுத்துவான்
காமன்போல சிலநேரம் மாறுவான்
தாமத்திதாலே தண்டனை தருவான்
ஏமாற்றி என்னை ஏளனம் செய்வான்

நல்ல கதையைச் சொன்னாடி மச்சாள்
நாலு சணங்களும் அறியவும் வேணும்
நோட்டுக்கு நாமங்கு போகவும் வேண்டாம்
றோட்டில நிற்கும் வாழ்வும் வேண்டாம்

பட்டபாடெல்லாம் கட்டிலில் போகட்டும்
நட்டநடுவாக விட்டுத்துத் தொலையட்டும்
கபீல் செய்த காரியம் தெரியுமா
கடற்கரை கூட்டி என்னையும் போனானே

பட்டப்பகலிலும் தொல்லைகள் அதிகம்
விட்டுத்துவர போமனும் விடான்
சொட்டும் அடிக்க ஏலாது அங்கு
நட்டுக்களரும் கட்டாரில் இருந்தால்

வெளிநாடு அனுப்புவார் காசும் இல்லாமல்
சுளிவேலை செய்து சுருட்டவும் பார்ப்பார்
கொழும்புலதானே லொச்சும் தந்து
விரும்பிய உணவும் உறையுளும் கொடுப்பார்

கள்ளக்கதைகள் சொல்வார் நமக்கு
கட்டாரில் நல்ல சம்பளம் என்று
மாட்டினால் அங்கு பூட்டியும் விடுவான்
றோட்டிலே நிற்போம் குடும்பம் குலைய

மேலையும் வேலை கிழையும் வேலை
மாடிக்குச் சென்றால் அங்கையும் வேலை
களைப்பாயிருக்கென்று இருக்கவுமேலா
கண்கெட்ட கபில் எங்கிட்ட வருவான்

ஒவ்வொருநாளும் உடுப்புக் கழுவ
இடுப்பு உடைந்துதான் பேவேனே நானும்
தடுப்பு முகாமபோல அங்கேயே இருப்போம்
கடுப்புத்தான் வரும் கட்டாரில் இருந்தால்

பொண்டுகள் அங்கு போகக்கூடாது
கண்டுக்காமலே இருக்கவும் வேணும்
தண்டுகள் போகும் அப்படியானால்
மன்றாடுகின்றோம் போகவும் வேண்டாம்.

# ஆதியூர் அம்பிலாந்துறை

(நடனம்)
அம்பிலாந்துறை எங்கள் ஊரம்மா - இது
அகிலம் போற்றும் பாரம்மா
அழகுக்கலைகள் நிலைக்குமம்மா - இங்கு
பழகு தமிழும் வாழுதம்மா

முக்குகர் வாழும் ஊரம்மா - இங்கு
முக்குகச் சட்டம் வாழுதம்மா
மூவேந்தர் வழிவந்த ஊரம்மா - இது
பாவேந்தர் வாழ்ந்த ஆதியூர்

அறுமக்குட்டிப்போடி வழ்ந்த இடம் - அவர்
அரசாட்சி செய்த பண்டையூர்
அன்னம் வழங்கி அரவணைத்து - இது
மன்னர் வழிவந்த ஊரம்மா

பன்றிக்கு மதில் கட்டி பயிர் செய்த - எங்கள்
குஞ்சிலயாப்போடி வாழ்ந்த ஊர்
வன்னியர் பரம்பரை தந்த ஊர் - இது
தஞ்சங்கொடுத்து வாழந்த ஊர்

கல்விச்சாலை தந்த ஊரம்மா - இது
கவிஞர்கள் வாழும் சாலையம்மா
மறவர்கள் வாழந்த சோலையம்மா - இது
மாற்றானை மண்டியிடா ஊரம்மா

கூத்துக்கள் கரகாட்டம் கும்மியென்று
கூத்தன் போற்றும் கலையம்மா
சாஸ்திரம் மந்திரம் சாகசம் - என்று
சதிரிதிரம் படைக்கும் உரம்மா

பழம்பெரும் மாரியம்மன் வாழுமூர் - இது
பண்டைகாலம் போற்றும் பேரூரு
அம்மானை பல எழுந்த அன்பூரு - இது
ஆண்டவன் ஆட்சி செய்யும் அறிவூரு

குடிமக்களை மதிக்கும் ஊரும்மா - இவர்க்கு
குலவரலாறு உண்டம்மா
வந்தோரை வரவேற்று அரவனைத்து - நல்
வாழ்த்துக்கள் கூறும் தாயம்மா

காடுவெட்டிக் களனியாக்கிப் பயிர் செய்து
நாடுவிட்டு நாடு சென்று உழைத்து வந்து
பாடுபட்டுச் சம்பாதித்துப் பொருள் திரட்டி
கோடுதாண்டா கொள்கைகொண்ட ஊரும்மா

கிட்டிப்புள்ளு தட்டுக்கோடு மட்டைப்பந்து - நல்ல
கிராமியக்கலைதந்த ஊரம்மா
பட்டிமாடு கட்டித்தயிர் தந்தபதி - இது
பரமசிவன்பெயர் கொண்டபதி

தோரணம் சிறப்புப்பெறும் ஊரம்மா - இது
தேரோடும் பதியின் கூறம்மா
சேற்று நிலமும் விளையமம்மா - எங்களுக்கு
மாற்றுத்தாய் மனம் இல்லையம்மா

# அவுஸ்ரேலியாப் பயணம்
## (நவீன நாட்டுக்கூத்து)

**சபை விருத்தம்**

ஆனைமுகனே போற்றி ஆண்மாக்களின் தலைவா போற்றி
அன்னையின் கட்டளையை ஆணையாக்கிக் கொண்டவா போற்றி
மண்ணை விண்ணை அளர்ந்த மருகனின் மருகா போற்றி
எம்மையும் ஆள்வாய் இறைவனே போற்றி போற்றி

**வணக்கம்**

மாரித்தாயே வேண்டுகின்றேன் மனக்கவலை தீர்ப்பாய் நீயே
பூரிக்கவேணும் மக்கள் செயல் பூமியும் செளிக்க வேணும்
கலைப்பூக்கள் கலைக்கழகம் காலமெல்லாம் நிலைக்க வேணும்
சீர் பெருகும் அம்பிலாந்துறையூரும் சிறப்பாக இருப்பதற்கு அருள்வாயே

**பொது விருத்தம்**

நாட்டிலே நடக்கின்ற நடப்பு விவகாரத்தை
கூத்திலே தருவதற்கு கலைப்பூக்கள் கலைக்கழகம்
காட்டிலுள்ள மிருகங்களைக் கலைத்ததுபோல்
வோட்டிலே ஏற்றுகிறார்கள் இரவினிலே

வீட்டிலுள்ள சொத்தையெல்லாம் வீனாக இழந்து
நட்டநடுக் கடலிலே நடப்பது என்னவோ
பட்டபாடு எல்லாமே விலை போகிறது
விட்டிடுங்கோ வேதனையின் பயனமிது

**காட்சி - 1**
**(அவுஸ்ரேலியா போவதற்கு தயாராகும் நபர்)**

**விருத்தம்**

ஆசை வந்தது அவுஸ்ரேலியா போவதற்கு
பேசினேன் இரண்டு லெட்சம்
காசிமே இல்லாமல் கஷ்ரப்பட்டு
கடல் கடந்து போவதற்கு கலக்கமின்றி

துண்டு துணிகொண்டு தூக்கமின்றி
கடற்கரைதனிலே காத்திருந்து
மாண்டாலும் விடமாட்டேன்
தாண்டுவேன் கடல்தனை இப்போ.

பாடல் - 1
அவுஸ்ரேலியா போவேனே அடுத்தமுறை ஆளாகி நிற்பேனே
மவுசு இருக்கிறது படகுமே காத்திருக்கு
மவுசு இருக்கிறது படகுமே காத்திருக்கு
திடீரெனப்புறப்பட்டால் சேரலாம் லேசாக

பாடல் - 2
பதினெட்டு நாள்பயணம் தப்பினால் இருபது நாள்வருமே
பாலுடன் விஸ்கட்டும் பலபல அயிற்ரமும்
பாலுடன் விஸ்கட்டும் பலபல அயிற்ரமும்
பரிதாப மரணமும் சிலநேரம் வரலாமே

பாடல் - 3
கடற்கரையோரமெல்லாம் வோட்டுக்கள் காத்தும் இருக்கிறது
ஏறினால் ரெண்டு லெட்சம் இறங்கினால் பதினெட்டு
ஏறினால் ரெண்டு லெட்சம் இறங்கினால் பதினெட்டு
மறுகதைகதைத்தால் என்ன நடக்குமோ

பாடல் - 4
உணவுப்பொருள் முடிந்தால் சிலநேரம் கடல் தண்ணீர் மட்டுந்தான்
சளைக்காமல் பேவேனே சாவுக்கு அஞ்சேனே
சளைக்காமல் பேவேனே சாவுக்கு அஞ்சேனே
சரித்திரம் படைக்கும் சங்கத்தமிழன் நானே

பாடல் - 5
நீங்களும் வாருங்கோ என்னோட நிலையைப் பாருங்கோ
வீண்வம்பு பேசாமல் விரும்பினால் ஏறுங்கோ
வீண்வம்பு பேசாமல் விரும்பினால் ஏறுங்கோ
தாமதித்தாலே தவிர்க்க நேரிடும்

**காட்சி - 2**

**(அவுஸ்ரேலியா போக இருக்கும் இருவர் சந்தித்தல்)**

**நண்பன் - 1**

வாரும் வாரும் மச்சானே உன்னுடைய முகமென்ன வாடிருக்கு
போறதில் பிரச்சினையா எனக்குப் புரியல்ல சொல்லுமடா

**நண்பன் - 1**

யார்தான் தடுத்தார்கள் உன்னைப் பாரினில் வெறுத்தார்கள்
போர்க்கொடி தூக்குவோம் நீயும் புறப்படு என்னோட

**நண்பன் - 2**

என்னத்தச் சொல்வேனே மச்சான் வீட்டிலே கஷ்ரமடா
எது கேட்டுப்போனாலும் பக்கத்தார் ஏழனம் பண்ணுறாங்க

**நண்பன் - 2**

உன்னுடன் நான் வருவேன் இல்லாட்டி விண்லோகம்பேவேனே
என்னுடைய மைத்துனரே இதைத்தான் திண்ணமுடன் சொல்வேன்

**நண்பன் - 1**

மறுக்காமல் கதைகதைக்க நீயும் மருந்துப்போத்தலெடு
குறுக்கால கதைபோட்டால் நீயும் கொஞ்சமும் இரங்காதே

**நண்பன் - 2**

இரண்டில் ஒன்று செய்வேன் என்னுடைய கரண்டு முகத்தைக் காட்டுவேன்
முரண்பாடு வந்தாலே என்னுடைய முனிமுகத்தைக் காட்டுவேன்

காட்சி - 3

சபை விருத்தம்

பயித்தியக்காரத்தனமாய் முடிவெடுத்தால் பாதியிலே நின்றுடுவீர்
பணமெல்லாம் வீணாகப்போக பரிதாப மரணம் வரும்
கைது செய்தால் சிறைதனில் கனகம்பி எண்ணிடுவீர்
பைந்தமிழா நீ கேளும் பார்ப்பாயடா வரலாற்றை

பாடல்

புத்தி சொல்லும் நண்பன்

கதையைக்கேளும் நண்பர்களே கஷ்ரம் ஒன்று வரப்போகுது
தமிழர்க்கு ஏன் இந்த நிலை என்று எண்ணிப்பாரு

அவுஸ்ரேலியா போக இருப்பவர்

என்ன மச்சான் எனக்கு நீ புத்தி சொல்லப் பாக்கிறாயா
சின்னத்தனமாய்ப் பேசி நீ சினத்தை உண்டு பண்ணாதே

புத்தி சொல்லும் நண்பன்

எங்களுக்குத் தெரியாதா நாட்டு நடப்பு என்னவென்று
சங்கத்தமிழன் நாங்கள் என்று சிரித்து முகங்கொடுப்போம்

புத்தி சொல்லும் நண்பன்

எத்தனைபேர் இன்று பிடிபட்டு சிறையில் வாடுறாங்க
பொய்கதையை விட்டுத்து பேசாமல் இருந்திடுங்கோ

அவுஸ்ரேலியா போக இருப்பவர்

எத்தனை பிரச்சினை வந்தாலும் நிற்கமாட்டோம் இந்நாட்டில்
அத்தனையும் தாண்டி அவுஸ்ரேலியா செல்வேனே

புத்தி சொல்லும் நண்பன்

பிச்சக்காற கதை கதைத்து பிதட்ட நியும் நினைக்க வேண்டாம்
கஞ்சத்தனம் பார்தாயென்றால் காலமெல்லாம் யோசிப்பாய்

புத்தி சொல்லும் நண்பன்

கப்பல்மாறிச் சென்றதனால் கானா நாட்டுக்குச் சென்றதாமே
தப்பாமல் சிறைவைத்து மெத்தி மெத்தி எடுத்தார்களாம்

## காட்சி - 4

அம்மா

என்ட மகனே செல்வராசா இந்தநிலை வந்ததேனோ
காசு பணம் இல்லையடா காலக் கொடுமை இதுவாய்ப்போச்சே

மகன்

இந்தக்கதை வேணாமம்மா இப்ப வேணும் ரெண்டு லெட்சம்
துறையில்தானே வோட்டு நிற்கு நிரையாய் நிற்கார் பல்பேர்தானே

அம்மா

வீட்டுக் கஷ்ரம் தெரியாதோடா வேறுவாத்தை கதைக்க வேண்டாம்
நாட்டை விட்டுப் போவாயென்றால் மாட்டுப்பட்டு மடபடுவாய்

மகன்

அகிலன் மோகன் எல்லாருமே அவுஸ்ரேலியா பெயிற்றாங்களே
அறுபதுனாயிரம் கொடுக்கிறார்கள் ஆறுமாதத்தால் வெளியில் வேலை

அம்மா

புத்திகெட்டுப் போச்சுதடா புரியாமலே கதைக்கிறாயே
பெத்த பொண்ணு ரெண்டந்தானே பேதலித்துப் போகுமடா

மகன்

பூமியையும் வித்திடுங்க பூணாரத்தையும் வித்திடுங்க
மாமித்தையும் கதைத்திடுங்க மாப்பிள்ளை பேறாரெண்டு

மகன்

அம்மா அப்பா கேளுங்க எனக்கு அறிவு மயங்கி வருகிறது
மெய் குளுந்து வருகுதல்லோ ஐயையோ ஐயோ் ஐயோஐயோ

**காட்சி - 5**

டொக்டர்

**விருத்தம்**

மனவருத்தம் பார்த்து மருந்து செய்யும் வைத்தியர் நான்
பிணமாக அனுப்பமாட்டேன் பிதட்டமாட்டேன் பிரசைகளை
குணமாக உரைத்தாலே குன்றுபோல் ஆக்கிடுவேன்
சனமெல்லாம் நமக்கே வரும் சுனங்காமல் அனுப்பிடுவேன்

பாடல் - 1

டொக்கடர் நானே காசித்தம்பி டொக்டர் நானே
இடக்குமுடக்கான வருத்தங்கள் பலதுக்கு
திடமாக மருந்துமே தெளிவாகக் கொடுப்பேனே

பாடல் - 2

எத்தனை ஊசி இந்தக் கையால் சப்பென்னப் பாச்சி
அத்தனை வருத்தமும் அறுத்தேனே முடித்தேனே
ஏலாமல் போனாலே அனுப்புவேன் கைலாயம்

**அப்பா**

ஐயா ஐயா ஐயையா டொக்டர் ஐயா அறிவு மயங்கிப் போச்சுதையா
மெய்யுந்தானே குழந்து போச்சு செய்வதொன்றும் தெரியவில்லை

**அப்பா**

படபடென்று அடிக்கிறது இவருக்கு குழலும் வைக்க முடியவில்லை
தேளிவாக மனசு இல்லை இவன் முளியும் சரியில்லை

**அம்மா**

ஐயா டொக்டரையா இன்னொருக்கா றை பண்ணிப் பாருங்கையா
பையனோட நிலைமை உங்களுக்க கைமருந்தில் தெரியும்

**டொக்டர் விருத்தம்**

அவுஸ்ரேலியா அவுஸ்ரேலியா என்கிறது அறிவு கூட மயங்கிறது
குழலும் அதைத்தான் சொல்கிறது கொண்டுபோங்கே ஒன்றுமில்லை
படகில் பார்த்து ஏத்திடுங்கோ பதுங்க வேண்டும் கடற் கரையில்
புதினமாகச் சொல்லவில்லை புறப்படுங்கோ நீங்கள் இப்போ

டொக்டர் பாடல் - 1
அம்மா தாயே கேளுங்க நீங்க அனர்த்தம் ஒன்று வரப்போகுது
அவுஸ்ரேலியா போக பலர் அறிவு மயங்கி நிற்கிறாங்க

டொக்டர் பாடல் - 2
சபையோர் நீங்கள் கெளுங்களன் சதிப்புரட்சி நடக்கிறது
தமிழர்கள்தான் போறார்களாம் துறைபோனோர்க்கும் தெரியவில்லை

காட்சி - 6
(கடலில் அவுஸ்ரேலியா செல்லல்)

நண்பன் 1
மேலேபோய் கீழே வருதே மேனி நடுங்கிறதே
மேலோகம் போய் விடுவோம் மேகமும் முட்டுதல்லோ

நண்பன் - 2
கடல் தண்ணீர் ஏறதல்லோ காலும் நனையுதல்லோ
உடையும் நனைந்து போச்சி உள்ளமும் நடுங்குதல்லோ

நண்பன் - 1
உணவும் முடிந்து போச்சி உணர்வும் சலித்துப்போச்சி
உறுதியும் இழந்து போனோம் ஊரார் நினைப்பு வருது

நண்பன் - 2
கடல் தண்ணீர் குடிக்கின்றோமே கண்ணீரும் வருகிறது
படபடென்று நடுங்கிறது பார்ப்பவர் யாருமில்லை

நண்பன் - 1
கண்னெட்டும் தூரத்தில் கடல் மட்டும் தெரிகிறது
குடலும் புடுங்கிறது இடமும் மாறேலாது

நண்பன் - 2
ஐயோ ஐயையோ அவலக்குரல் கேட்கல்லையோ
நொந்துதான் போய்விட்டோமே நொடிப்பொழுதில் காப்பாற்றுங்கள்

**நண்பன் - 1**
ஏற்றினார்கள் எங்களையும் ஏறினோம் நாங்களுந்தன்
திசைமாறிப் போனதனால் திண்டாடி வந்தோம் நாங்கள்

**நண்பன் - 2**
அனுப்புங்கோ எங்களையும் எங்களது நாட்டுக்கு
அவுஸ்ரேலியாப் பயணம் வேண்டாம ஆசையும் முடிந்து போச்சி

**நண்பன் - 1**
கதையைக் கேளும் சபையோர்களே கப்பல்மாறிப் போனதல்லோ
அலியா வோட்டில் நம்மை ஏற்றி பலிகொடுக்கப் பார்க்கிறார்கள்

**நண்பன் - 2**
என்னசெய்வோம் ஏது செய்மோம் தமிழர் நிலைமை இதுவாய் போச்சே
தட்டுப்பட்டுபோயிருந்தால் தாண்டிருப்போம் ஆழியிலே

**நண்பன் - 1**
எங்களையும் ஏத்துறாங்க எத்தனைபேர் வருகிறார்கள்
உணவையும் அங்கு காணோம் உறங்கவுந்தான் வழியுமில்லை

**நண்பன் - 2**
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகின்றோம்
தண்ணீர்கூட கஷ்ரந்தானே மண்ணெண்ணையும் முடிந்து போகும்

**நண்பன் - 1**
இறுதி மூன்று நாட்களுமே எங்களைப் பார்ப்பார் யருமில்லை
கடல் தண்ணீர் குடித்துத் தானே காலங் கடத்தி இருந்தோம் நாங்கள்

**நண்பன் - 2**
அயல் நாட்டுக் கப்பல் ஒன்று அபயக்குரல் கேட்டு வந்து
இன்பமுடன் அரவனைத்து இலங்கைக்குத்தான் அனுப்பினார்கள்

**நண்பன் - 1**
புத்தி கொட்டு இருந்தால் நாங்கள் பத்திகெட்டுப் போக மாட்டோம்
நித்தம் நித்தம் வேண்டுகின்றோம் நினைத்தபடி நடக்கேலாது.

# பொறுப்புணராப் பாண்டாட்டி

(நவீன நாட்டுக்கூத்து)

காட்சி - 1
(போடியாரும் வேலைக்காரனும்)

**போடியார் விருத்தம்**
அத்தை மகள் மாமன் மகள் அன்புள்ள வித்தை மகள்
அறு சுவை உணவருந்தும் அறிவுள்ள மொக்கு மகள்
குடும்பப் பொறுப்புனராமல் படம் பார்க்கும் மொக்குமகள்
பன்றிபோல் சீறிடுவாள் பண்பில்லா சண்டைக்காறி

**போடியார் பாடல்**
தும்பியே கௌடா என் பொன்டாட்டி எங்கே பாரு
வேலைக்குப் போக வெணும் இப்ப வேணும் அவளடா

**வேலைக்காறன் பாடல்**
ரீவிக்கு முன்னால் அப்ப அவ ஆவென்டுத்திருக்காவு
சிந்தனை மறந்துதான் இப்ப அவ சிரிப்பில இருக்கிறாவு

**போடியார் பாடல்**
ஆறுமனியானால் அவ இப்ப என்னபாடுபடுறா
நினைத்ததை நடத்தித்தான் நிம்மதியை குலைக்கிறா

**வேலைக்காறன் பாடல்**
ஏத்தனை நாளாக உங்களையும் ஏமாற்றி வாறா பாரு
பேற்ற பிள்ளையையும் பக்கத்தில் இருக்குதல்லோ

**போடியார் பாடல்**
குடும்பப் பொறுப்பில்லை இவளுக்கு கும்மலாட்டம் இப்போ
தடுக்கவும் முடியவில்லை தன்மானம் போய்விடுமே

**மகள் பாடல் - 1**

அம்மா அம்மா அம்மா அம்மா அரசி இப்ப தொடங்குதுகா
அப்பாட கதைய விடுகா அடுத்தகட்டம் தொடங்குதகா

**மகள் பாடல் - 2**

அம்மா அம்மா அம்மா அம்மா நம்ம குடும்பம் சுப்பருகா
அப்பாவோட பிறகு கதைகா அருச்சுனன் கலக்குறாங்கா

**காட்சி - 2**

**(போடியார் மனைவி படம் பார்த்த கதை பற்றிக் கூறுதல்)**

**மனைவி பாடல் - 1**

என்ன செய்வோம் ஏது செய்வோம் என்னிலமை இதுவாய் போச்சே
தங்கமான புருஸன் முதல் திருமதி செல்வம் வரையும் பார்ப்பேன்

**மனைவி பாடல் - 2**

செய்திபோனால் பூட்டி விட்டு அந்த நேரம் சோறு திண்பேன்
பார்த்த நாடகம் பார்க்க வேணும் படமென்றாலும் விடவும் மாட்டேன்

**மனைவி பாடல் - 3**

நேரத்தோடு சமைத்துவிடுவேன் நேரங்கெட்டு சோறுகொடுப்பேன்
நிம்மதியாய்த் தூங்குவதற்கு ஆனந்தம் பார்க்க வெணும்

**மனைவி பாடல் - 4**

காதல் படம் என்றவுடனே பதைபதைப்பேன் வரும் வரையும்
பக்திப்படம் அதனைப் பூட்டி பக்கத்தாரை கூப்பிடுவேன்

**காட்சி - 3**

**(மகள் காதலனோடு ஓடிப்போதல் ஓடுதல்)**

**மகள் பாடல்**

ஐயோ அத்தான் என்னைப் பாருங்க
அழகாக இருக்கிறேன் கேளுங்க
பலபேருக்கு வெட்டுக்கொடுத்த நான்
பாலகன் உன்னை விரும்பினேனே

**காதலன் பாடல்**
ராசாத்தி நீ என்னைப்பாரடி
ரவுஷர் போடும் சக்களத்தி
கை நிறைய வளையலும் உனக்கு
காது கால் எல்லாம் அணிகலனும்

**மகள் பாடல்**
அம்மா இப்ப படம் பாப்பாவு
அதுக்குள்ள நாம் ஓடிடுவோம்
ஆத்தோரம் தோணி கிடக்குதா
வெளிக்கிடுங்க அத்தான் போய்விடுவோம்

**மகள் பாடல்**
படிப்பு எனக்கு எறுதில்லத்தான்
பார்க்கிற படமெல்லாம் உன் நினைப்பு
பாலகன் உன்னைக் காணும்போது
பண்பான வாத்தைகள் பொங்குதத்தான்

**காதலன் பாடல்**
உன்னண்ணன் பொல்லாதவன்
எந்நேரமும் அவன் கோபக்காரன்
கெதியாக வெளிக்கிடு என் கண்னே
நேரத்தோட நாம் ஓடிடுவோம்

**காட்சி - 4**
**(காதலியின் அண்ணனுக்கும் காதலுனுக்கும் சண்டை)**

**காதலியின் அண்ணன் பாடல்**
பண்டப் பொருளென்று நினைத்தாயோ - உன்
மண்டையைச் சீவுவேன் பாரடா

**காதலன் பாடல்**
ஊரை ஏமாற்றிப் பிழைத்தாயே - என்னை
கேலியும் செய்யவும் நினைக்காதே

**காதலியின் அண்ணன் பாடல்**
பெட்டைகளை ஏமாற்றிய பேயனே - உன்னைப்
பரலோகம் அனுப்புவேன் துஸ்ரனே

**காதலன் பாடல்**
தன்னம்பிக்கை இல்லாத சாத்தனே - உன்னை
சிவலோகம் அனுப்புவேன் கத்தனே

**காதலியின் அண்ணன் பாடல்**
பெண்ணைத் திருடிய பித்தனே - உன்னை
மண்ணுக்குள் அனுப்புவேன் மாயவா

**காதலன் பாடல்**
யானைபோல் வெருட்டிய யக்சனே - உன்னை
பானைக்குள் புகத்தவேன் மொக்கனே

**காதலியின் அண்ணன் பாடல்**
தங்கையை ஏமாற்ற நினைத்தாயோ - உன்
கொங்கையை அறுப்பேனே கொத்தனே

**காதலன் பாடல்**
தட்டிட்டான் வேலைபார்க்கும் அந்தியா - உன்னைத்
தடிகொண்டு அடிப்பேனே சன்னியா

**காட்சி - 5**
**(காதலன் காதலியுடன் சண்டையிட்டுப் பிரிந்து போதல்)**

**காதலன் பாடல் - 1**
மண்டுக்கன்னன் கொப்பன் மாட்டுக்கும் கேவலம்
கௌரவம் பேசிறாண்டி ஒன்ட கொப்பன் கௌரவம் பேசிறாண்டி

**காதலன் பாடல் - 2**
நீயும் வேனாண்டி ஒன்ற குடும்பமும் வேணாண்டி
போடி நீயும் போடி போடி போர்டி

**காட்சி - 6**
**(கணவனும் மனைவியும் முரண்படல்)**

**கணவன் பாடல் - 1**
மூதேவி நாயே வாடி உன்னை
தேடித்திரியிறேன் பாவி
படம்பார்த்து படம் பார்த்து மவுசுகெட்டுப்போன

**கணவன் பாடல் - 2**
பிள்ளையும் ஓடித்து கரடி நம்
பையனும் கெட்டான் திருடி
கேள்வியும் கேட்டுகேட்டு புருஷனை வெருட்டிய

**மனைவி பாடல் - 1**
என்னகா சொன்னா புருஷா நம்ம
புள்ளையும் ஓடித்தா ராமா
என்ன செய்வேன் ஏது செய்வேன் எனக்கொன்னும் புரியல்ல

**மனைவி பாடல் - 2**
படம்பார்த்து படம்பார்த்து நாங்கள்
பண்பான பிள்ளையையும் இழந்தோம்
கனவன் சொல்ல கேட்காமல் களிசற வேல பார்த்ததனால்

# வியாபாரியின் கைவரிசை

(நவீன நாட்டுக்கூத்து)

காட்சி - 1

**மாடுவாங்க வந்த வியாபாரியின் பாடல் - 1**

மாடு வாங்க வந்தேனே படுவானில் மாடுவாங்க வந்தேனே
ஓட்டு மாடெடுத்து றொட்டிலே போவேனே
ஓட்டு மாடெடுத்த றொட்டிலே போவேனே
காட்டுவேன் வேலையைக் கைவந்த கலையாக

**மாடுவாங்க வந்த வியாபாரியின் பாடல் - 2**

வாடிவாடியாய்ப் போவேன் நானுமங்கு வீடியும்தான் அடிப்பேன்
கூடிக்கதைப்பதற்கு குமரியை அழைப்பேனே
கூடிக்கதைப்பதற்கு குமரியை அழைப்பேனே
மூடி மறைப்பதற்கு பணத்தையும் இறைப்பேனே

**மாடுவாங்க வந்த வியாபாரியின் பாடல் - 3**

காலையில் புறப்படுவேன் என்றும் மாலையில் திரும்பிடுவேன்
கிடைக்கும் நேரமெல்லாம் கிண்டலும் பண்ணுவேன்
கிடைக்கும் நேரமெல்லாம் கிண்டலும் பண்ணுவேன்
துயர் துடைப்பதுபோல் தூண்டிலும் போடுவேன்

**மாடுவாங்க வந்த வியாபாரியின் பாடல் - 4**

பெண்களைச் சுரண்டி நானும் பேதைகளாக்கிடுவேன்
குமரியையும் கிளவியையும் கிட்டையும் அழைப்பேனே
குமரியையும் கிளவியையும் கிட்டையும் அழைப்பேனே
ஏலாண்டு சொன்னாலும் எட்டி எட்டிப் பிடிப்பேனே

**மாடுவாங்க வந்த வியாபாரியின் பாடல் - 5**

பிள்ளையும் வாங்கிடுவேன் ஏலுமென்றால் பிள்ளையும் கொடுத்திடுவேன்
பள்ளிக்குச் செல்லாமல் கல்வியை அழிப்பேனே
பள்ளிக்குச் செல்லாமல் கல்வியை அழிப்பேனே
பண்பாடுதனையும் அடியோடு சாய்ப்பேனே

காட்சி - 2
(மகளும் தகப்பனும் சந்தித்தல்)

**தகப்பன் பாடல்**
வாரும் வாரும் மகளே - உன்
மேனியில் வாட்டமுண்டு
வாடித்தலத்தில் யாரேனும்
வளிசல்கள் வந்தார்களா

**மகள் பாடல்**
கதையை விடுங்க அப்பா மாடுவாங்க
வாடிக்கு வாறார்களா
வந்து போறார்களென்று வாடிவளிய
அசடு கதைக்கிறாங்க

**மகள் பாடல்**
அம்மா இல்லையென்றாலும் நாங்கள்
நல்லாத்தானே இருக்கோம்
இப்படித்தான் இருக்கும் போது நமக்கேது
துப்புக்கதை வரவேணும்

**தகப்பன் பாடல்**
என்ன கதை மக்காள் இதை நீங்கள்
எடுத்துக்கொள்ளக் கூடாது
நன்பனாய் வருக்னிறான் நம்மளை
நன்றாகப் பார்க்கின்றான்

**மகள் பாடல்**
என்ன கதையப்பா இதை நாங்கள்
ஏற்றுக்கொள்ளமாட்டோம்
கள்ளக் கதை கதைத்து எங்களைக்
கஸ்ரப்படுத்த வேண்டாம்

**மகள் பாடல்**
யாவாரி அவனல்லோ
உங்களுக்கு அவனோடு என்ன கதை

புரியாமல் இருக்கிறீர்கள் நீங்கள்
புண்படப் போகிறீர்கள்

**தகப்பன் பாடல்**
நண்பனும் அவனல்லோ நம்மட
துன்பங்கள் போக்குவானே
விளங்கிக் கதபுள்ள அதில்
வில்லங்கம் இல்ல புள்ள

**மகள் பாடல்** - *1*

**(இசையில் மாற்றம்)**
கதையொன்றைக் கேளுமப்பா அங்கொரு
வாடியில் நடந்த கதை
பெற்றோரை அழைத்துத்தான் யாவாரி
வேலைக்கு அனுப்பினான்.

**மகள் பாடல்** - 2
அவளுக்கு ஒரு பிள்ளை - அந்த
வாடியில் இருந்தாளாம்
யாவாரியும் அந்தப் பிள்ளையைப் - பல
போட்டோக்கள் எடுத்தானாம்

**மகள் பாடல்** - 3
பக்கத்து வாடிக்காறர் உனக்கென்ன
வேலை என்றார்களாம்
களியாணம் முடிக்கப்பேறன் என்று
கள்ளக்கதை சொன்னானாம்

**மகள் பாடல்** - 4
பிடித்து எடுத்தார்களாம் அவனைப்
புரட்டி எடுத்தார்களாம்
மண்டியிட்டு அவனுந்தான் அங்கிருந்து
தப்பிச் சென்றானாம்

**காட்சி - 3**

**(மாடு வாங்க வந்த வியாபாரியும் வாடிக்காரனும் - தகப்பன்)**

**தகப்பன் பாடல்**

வாடாமச்சான் வாடாமச்சான் வாடிக்குத்தான் வாடா மச்சான்
சங்கதி பிளையாக இருக்கு சட்டென்ன முடித்திடுவோம்.

**வியாபாரி பாடல்**

பிள்ளைக்கு விலைபேசி தொல்லையை களட்டிவிடு
கொள்ளையாகக் கேட்காத பிள்ளையைத் தந்துவிடு

**தகப்பன் பாடல்**

அறுபது தந்துவிடு மறுகதை கதைக்காத
பெறுவதைப் பெற்றுவிடு பெருமையாய் வாழ்ந்தவிடு

**வியாபாரி பாடல்**

நாப்பதும் நான்தாறேன் நாக்குக்கும் ருசி தாறேன்
பார்ப்பதற்கு பழைய ரீவி பரிந்துரைப்பேன் இப்போது

**தகப்பன் பாடல்**

சத்தம்போட்டுக் கதைக்காத மற்றவர்க்குக் கேட்டுவிடும்
நித்தம் நித்தம் நீ வரனும் நிம்மதியாய் நானிருக்க

**வியாபாரி பாடல்**

விலைபேச வேண்டாம் நீ இளையதைத் தந்துவிடு
பழைய கதை மறந்து விடு நிலைமையை உணர்ந்து நட

**தகப்பன் பாடல்**

ஐம்பதைத் தந்துவிடு அடுத்த கதைய விட்டுவிடு
துண்பத்தை போக்க நீ துட்டை உடன் தந்துவிடு

## காட்சி - 4

**(மகள் வாடிக்காறர்களை அழைத்தல்)**

**மகள் பாடல்**

ஐயையோ ஐயையோ ஐயோ ஐயோ
ஓடோடி வாங்களே வாடிக்காறரே ஓடோடி வாங்களே
தங்கையை வித்துப்போட்டான் தரித்திரங்கெட்ட அப்பன்

**மகள் பாடல்**

ஓடோடி வாருங்கோ இங்கு நடந்த
கொடமையக் கேளுங்கோ
தமிழரின் தலைவிதி இங்கு தரங்கெட்டுக் கிடக்கிறதா

**மகள் பாடல்**

அம்மாவும் எனக்கில்லை இப்போ
தங்கையும் போய்விட்டாள் என்னையும் விற்றிடுவார்
இப்போ நீங்கள் தங்கையைக் காப்பாற்றுங்கள்

**பொதுமக்கள் பாடல் - 1**

ஓடிவாங்க ஓடிவாங் கேடி விளையாட்டொழிப்போம்
தேடிப்பிடித்து கொண்டுவந்து பாவியையும் மடகிடுவோம்

**பொதுமக்கள் பாடல் - 2**

மாடுவாங்கி ஆடுவாங்கி மனிசனையும் வாங்கிவிட்டான்
பாதகமான வேலை செய்து பண்பாட்டை அழிக்கிறானே

**பொதுமக்கள் பாடல் - 3**

தகடுவாங்கி இரும்பு வாங்கி தட்டுக்கெட்டுத் திரிந்தவன்
ஐஸ்கிறின் விற்றவன் அலைகிறான் பிள்ளைக்கு

**பொதுமக்கள் பாடல் - 4**

குடும்பத்தை ஏமாற்றி தடம்புரட்டப் பார்க்கிறான்
ராத்திரியில் வந்து அவன் நாய்போல அலைகிறான்

**பொதுமக்கள் பாடல் - 5**

காசைக்காட்டி ஏமாற்றி களிசற இப்போ வருகின்றான்
நாசவேலை செய்ய நக்குன்னி வருகின்றான

## துருபதன்

**(இதிகாச நாடகம்)**

**காட்சி - 1**

(துருபதன் துரோணர் இருவரும் நண்பர்கள்)

**துருபதன்**
துரோணரே நான் இன்று உனக்கு நற்செய்தி ஒன்றினைச் சொல்லப் போகின்றேன். அதை எண்ணி நீயே சந்தோசம் கொள்வாய்.

**துரோணர்**
இப்படியே எத்தனை தடவை என்னிடம் கூறியுள்ளாய். பகுடியைவிடு நண்பா!

**துருபதன்**
துரோணரே விரைவிலே நான் பாஞ்சால தேசத்திற்கு அரசனாகப் போகின்றேன்

**துரோணர்**
(கட்டிப்பிடித்து) மிக்க மகிழ்ச்சி நண்பா மிக்க மகிழ்ச்சி என் நன்பன் பாஞ்சால தேசத்திற்கு அரசனாவதையிட்டு புகழாங்கிதம் அடைகின்றேன்.

**துருபதன்**
நன்பா நீ எனது அரண்மனைக்கு வரவேண்டும். உனக்குப் பொன்னும் பொருளும் ஏன் போகமும் அள்ளி அள்ளித் தருவேன் நண்பா அள்ளி அள்ளித் தருவேன். உன்னை ஒரு மாசாலியாகக் காட்டுவேன். மக்கள் முன் நீதான் மாபெரும் பலசாலி.

**துரோணர்**
துருபதா உன்னுடைய நல்ல என்னத்தை நான் பாராட்டுகின்றேன். எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது. முதலில் பதவியை ஏற்றுக்கொள் நண்பா சந்தர்ப்பம் வரும்போது உன்னிடம் நிச்சயம் வ்ருவேன். மிக்க மகிழ்சிசி உனது அழைப்புக்கு.

துருபதன்
துரோணரே நீயும் நானும் இளமையில் இருந்து இணைபிரியாமல் வாழ்ந்தவர்கள். ஒரு மாங்கனி என்றாலும் பாதி பாதியாக உண்டவர்கள். உன்னைப் பிரிந்து என்னால் இருக்கமுடியாது.

துரோணர்
(கையைப் பிடித்துக்கொண்டு)
நண்பா இளமையில் இருந்து நாம் அப்படித்தான் இருந்தோம். என்ன செய்வது இப்போது மக்களை ஆழவேண்டிய பொறுப்பை உன்னிடம் ஆண்டவன் தந்துள்ளான். அதற்கு ஏற்ப நீ நாட்டை ஆளு. உனக்குத் துணையாக நான் இருப்பேன்.

துருபதன்
நன்பா என்னை மறந்து விடாதே உனது வருகைக்காக எனது அரண்மனை என்றும் திறந்திருக்கும்.

## காட்சி - 2

(ஏழைப் பிராமணனான துரோணர் கிருபாச்சாரியாரின் தங்கை கிருமியை மனஞ் செய்துகொண்டார். அவர்களுக்கு அசுவத்தாமன் என்ற மகன் பிறந்தான். வறுமையில் வாடிய நன்பனுக்கு தனது இளமைக்கால நண்பனான துருபதனின் நினைவு ஏற்பட்டது. அவனைச் சந்தித்தால் பெரும் செல்வம் கிடைக்குமென எண்ணிக்கொண்டு துருபதனின் அரண்மனைக்குச் செல்கின்றான்.)

துரோணச்சாரி
அன்பே இன்னும் எத்தனை நாளைக்கு இவ்வாறு வறுமையில் வாடுவது. என்ன சொல்வதென்று எனக்குத் தெரியவில்லையே.

கிருமி
நாதா வறுமையைப் பற்றி நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம். ஆண்டவன் இருக்கின்றார்.

துரோணர்
வாழ்க்கையில் உயர்வதற்குப் பண்பு வேண்டும். அதனிலும் பொருளும் அவசியம்தான் என்பதனை இப்போதுதான் உணர்கின்றேன்.

**கிருமி**
கவலையை விடுங்கள் உனது நண்பன்தான் பாஞ்சால தேசத்துக்கு மன்னனாக இருக்கின்றான் அவன் உங்களுக்கு எப்போதும் உதவுவானே.

**துரோணர்**
மகன் பிறந்ததால் வறுமை எம்மை பீடித்துக்கொண்டது. என்ன செய்வது என்று தெரியவில்லை. நண்பனிடம் செல்வதற்கு எனக்கு விருப்பமில்லை எனினும். அவனிடம் செல்வோம் கட்டாயம் உதவுவான்தான்.

**கிருமி**
கவனமாகச் சென்றுவாங்கள்.

**காட்சி - 3**
**(வாயில் காவலர்கள்)**
**(துரோணர் துருபதனிடம் செல்லுதல்)**

1. யார் நீங்கள் எங்கு செல்ல வந்தீர்கள்

2. தம்பி நான் துரோணச்சாரியார் அதுவும் துருபதனின் இளமைக்கால நண்பன்

(காவலர்கள் மன்னனிடம் சென்று விடயத்தினைக் கூறுதல்)

உத்தரவு கிடைத்துள்ளது உள்ளே செல்லலாம். ஆனால் மன்னன் விசியாக இருக்கிறார், காத்திருக்கவும்.

**துரோணர்**
நண்பா உன்னை இந்த அரண்மனையிலே அரசனாகக் காண்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. எனது இளமைக்கால நண்பன் நாடாளும் வேந்தனாக இருப்பது எனக்குப் பெருமைதான். அதுவும் பாஞ்சாலநாட்டுக்கு அரசனாக இருப்பது பாரையே வெல்லும். நாடாளும் வேந்தா நம்மை யாராலும் பிரிக்கமுடியாது. (ஆனந்தக் கண்ணீர் விடல்)

**துருபதன்**
போதும் நிறுத்து ! பொய்யான வாத்தை கூறி ஏமாற்றாதே. பிச்சக் காரப் பிராமணியான நீ நாடாளும் வேந்தனுடன் நட்புக்கொள்வதா?

**துரோணர்**
நண்பா நீ எந்தன் நண்பன். இளமையில் இருந்து இணைபிரியாமல் வந்தவர்கள் நாம். இப்படியே உன்னிடம் எத்தனை பகிடி விட்டிருப்பாய். முன்னனாகியும் இன்னும் அது மாற வில்லையே. இதுதான் நண்பா வாழ்க்கையின் நியதி.

**துருபதன்**
பிள்ளைப் பாராயத்துக் கதையெல்லாம் சொல்லி என்னைத் தொந்தரவு செய்யாதே. அன்று நான் அப்படித்தான் இருந்தேன். இன்று நான் இப்படித்தான் கதைப்பேன் என்ன பிச்சை எடுக்க வந்தாயா? உடனே இங்கிருந்து போய்விடு.

**துரோணர்**
துருபதா என்னைக் கோபப்படுத்தலாம், அப்போது நீ சிரிக்கலாம் என்று ஒரு பரிட்சை வைத்துப் பாக்கின்றாயா?

**துருபதன்**
என்ன பெரிய கதை கதைக்கின்றாய் (தள்ளிவிடல்)

**துரோணர்**
நண்பா நீ எனது நண்பன். இளைமையில் இருந்து இணைபிரியாமல் வாழ்ந்தவர்கள். ஏன் இன்னும் இன்னும் பரிட்சித்துப் பார்க்க விரும்புகின்றாய்.

**துருபதன்**
பிள்ளைப் பராயத்துக் கதைகூறி என்னைத் தொந்தரவு செய்யாதே. உடனே இங்கிருந்து போய்விடு. இல்லாவிட்டால் நடப்பது வேறு. (மீண்டும் தள்ளிவிடல்)

**துரோணர்**

**(கோபத்துடன் உரத்த குரலில்)**

துருபதா நீ பதவியைக் கண்டதும் பண்பை இழந்து விட்டாய். பதவி உயர்ந்தால் பண்பு உயரவேண்டும் ஆள் உயர்ந்து இருக்கின்றாய் உன் அறிவு உயர வேண்டும்.

**துருபதன்**

சப்புகட்டு வேதாந்தம் இங்கு பேசாதே. எப்படி இங்கு வந்தாயோ அப்படியே போகலாம்.

**துரோணர்**

துருபதா நான் இல்லாவிட்டால் நீ என்றோ மடிந்திருப்பாய். அதலாம் போகட்டும் என்னை நீ சீண்டிவிட்டாய். துருபதா நான் நினைத்தால் அக்கினியாஸ்திரத்தால் உன்னை அழித்துவிடமுடியும். ஆனால், அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை. எனது சீடன் உன்னைக் கட்டி இழுத்துக்கொண்டு எனது காலடியில் போடும்படி செய்வேன் இது நிச்சயம்.

**துருபதன்**

துரோணா? பிராமணியான நீ இங்கிருந்து தப்பிப்போ? உன்னையும் உன் சீடர்களையும் நான் நன்கு அறிவேன்.

**துரோணர்**

நன்றி மறந்தவன் அழிவான் என்பதற்கு நீ உதாரணமாக இருப்பாயடா?

**மந்திரி**

அரசே துரோணாச்சாரியாரை நீங்கள் இப்படிப் பேசியிருக்கக்கூடாது. அவர் கோபங்கொண்டால் நடப்பது உங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

**துருபதன்**

மந்திரியாரே துரோணாசாரியார் ஆண்டி, நான் அரசன். நானும் அவனும் எப்படிச் சமனாகமுடியும்.

**மந்திரி**

மன்னா நம்மிடம் படையிருக்கலாம். நாடு நகர் இருக்கலாம். இவையெல்லாம் நொடிப்பொழுதில் அழியக்கூடியவை.

**துருபதன்**

மந்திரியாரே துரோணரை நாம் உள்நுழைய விட்டால் அது பின்னால் நம் ஆட்சிக்குப் பிரச்சினை. அதனால்தான் அந்த முடிவை எடுத்தேன்.

**மந்திரி**

மன்னா துரோணர் பண்பில் சிறந்தவர் என்பதனைத் தாங்கள் அறியாத ஒன்றல்ல. என்ன நடக்கப்போகின்றதோ ஆண்டவந்தான் பதில் சொல்ல வேண்டும்.

**துருபதன்**

மந்திரியாரே பயம் வேண்டாம், நான் மன்னன், நமக்கேது பகைமை, அப்படியென்றாலும் அழிப்பேன் அதனை.

## காட்சி - 4

**(அருச்சுனன், வீமன் குரு தட்சனை செய்தல்)**

**அருச்சுனன்**

குருவே எனது குருதட்சனையினை உமக்காகச் சமர்ப்பிக்கின்றேன்

**வீமன்**

குருதேவா எனது குரு தட்சனையினையும் உமது பாதாத விந்தங் களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

**துரோணர்**

அருச்சுனா, வீமா எத்தனையோ சீடர்கள் எனக்குக் குருதட்சனை செய்திருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் நான் ஏற்றுக்கொண்டேன். உங்களது குருதடசனை எனக்கு வேண்டாம்.

**அருச்சுனன்**
குருதேவா நாங்கள் ஏதும் பிழை செய்யவில்லையே.

**வீமன்**
எங்களை அறியாமல் நாங்கள் ஏதும் பிழை செய்திருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள் குருதேவா மன்னித்துக் கொள்ளுங்கள்.

**துரோணர்**
கலங்காதீர்கள் எனது வாழ்க்கையில் பிடித்த சீடர்கள் நீங்கள். அதனால் உங்களிடமிருந்து வேறொரு குருதட்சனையினை எதிர்பார்க்கின்றேன்.

**வீமன்**
சொல்லுங்கள் குருதேவா மலையானாலும் பெயர்த்துக்கொண்டு மண்டியிடச் செய்கின்றோம்.

**அருச்சுனன்**
வில்லுக்கு மசியாத வீரனுண்டோ? வெற்றியுடன் வருவதற்கு விடைகொடுங்கள்.

**துரோணர்**
நான் என்னவென்று கூறவில்லை நீங்கள் இப்போது......?

**வீமன்**
வேறு எதனைக் கூறுவீர்கள். குருதேவா நாம் அவதானித்துக் கொண்டுதான் வந்தோம். உங்கள் மனம் சஞ்சலப்பட்டிருப்பதனை.

**அருச்சுனன்**
யார் அந்தக் கடுங்கோளை? உங்கள் கரு மனதினைக் கலங்கப் படுத்தியவன்.

**துரோணர்**
சீடர்களே பாஞ்சால தேசத்து மன்னன் துருபதன் நன்றி மறந்தவன். அவனைக் கட்டி இழுத்துக்கொண்டு என்காலடியில் போட்டு உங்கள் குருதட்சனையினை நிறைவுசெய்யுங்கள்.

**அருச்சுனன், வீமன்**
உத்தரவு குருதேவா?

**அருச்சுனன்**
அண்ணா துருபதனைத் திருத்த வேண்டும் அல்லது அடியோடு அழிக்க வேண்டும்.

**வீமன்**
தம்பி எனது தண்டாயுதத்திற்கும் உனது வில்லுக்கும் பணியாத பகைமையில்லை. துரபதனைக் கட்டி இழுத்துக்கொண்டு வருவோம் முடிவினைக் குருதேவர் எடுக்கட்டும்.

**அருச்சுனன்**
சரியண்ணா? வாருங்கள் செல்வோம்.

## காட்சி - 5

**(அருச்சுணனும் வீமனும் துருபதனிடம் செல்லுதல்)**

**வாயில் - 1**
யார் நீங்கள் ? எங்கே செல்லப்போகிறீர்கள்

**வாயில் - 2**
மன்னன் உத்தரவின்றி உள்ளே செல்லமுடியாது.
(இருவரையும் மடக்கி உள்ளே செல்லல்)

**துருபதன்**
யாரடா நீங்கள் உத்தரவின்றி உள்ளே வந்தவர்கள். பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறீர்கள். பண்பிளந்த பரம்பரையில் வந்தவர்களோ?

**அருச்சுனன்**
உற்ற நண்பனையே மறந்த உமக்கு நாங்கள் எப்படித் தெரியும் துருபதா? பாதவி பண்பை மறைக்குதடா உனக்கு.

**வீமன்**

நன்றி மறந்த உனக்கு நாடாளும் ஆசையா? நாற்காலியில் இருந்தால் நான்கு திசையும் பணியுமடா அதற்கு?

**துருபதன்**

அரசன் இருக்கும் இடம்வந்து அடக்கமின்றிப்பேசும் அற்ப மனிதர் யாரடா நீங்கள்?

**அருச்சுனன்**

குருவுக்கு மரியாதை செய்து குவலயத்திலே உயர்ந்து நிற்கும் குருவம்சத்தைச் சேர்ந்த வீரமகன் அருச்சுனன்டா? தெரியவில்லையா உனக்கு தில்லாகப்பேசும்போது.

**வீமன்**

துரோணருக்குச் செய்த துரோகத்தைத் தட்டிக்கேட்க உன்னைத் தேடிவந்த துடிதுடிக்கும் தசையைக்கொண்டமெல்யுத்த வீரன் வீமன்டா? உணரவில்லையா நீ?

**துருபதன்**

(திடுக்கிட்டு)

அருச்சுனா வீமா ஆத்திரத்தில் புத்தி இழந்து அவசரப்பட்டுப் பேசாதே. நடந்தது எனக்கும் துரோணருக்கும் இடையில் நீங்கள் ஏன்?

**அருச்சுனன்**

நன்றி மறந்தவன் எங்கிருந்தாலும் நாடாளமுடியாதுடா?

**வீமன்**

நன்றி மறந்தவனைக் கொல்ல கூறுறுவன் வேண்டாம் அவன் மறந்த நன்றியே அவனைக்கொன்றுவிடுமடா?

**துருபதன்**

எனது அரசாட்சி இடம்பெறும் இடத்தில்வைத்து என்னைச் சீண்டுகின்றீர்கள். இதோ வருகின்றேன்.

**அருச்சுனன்**
மனிதனை மனிதனாக மதிக்கப்பழக வேண்டும் அதனை நீ தனியாகக் கற்கவேண்டும்.

**வீமா**
அரியாசனத்தில் நீ இருந்தால் அனைத்தையும் செய்யமுடியுமென்ற நினைப்பா?

**துருபதன்**
அடக்கிப்பேசு, நாக்கை அறுத்து விடுவேன். அரசஅவைக்குள் வைத்து அட்டகாசமா செய்கின்றீர்கள்.

**(சண்டை இடம்பெறல், இறுதியில் கட்டிக்கொண்டு செல்லுதல்.)**
**அருச்சுனன்**
குருதேவர் கொண்டுவரச் சொன்னதற்காக உன்னை அங்கு கொண்டு செல்கின்றோம். இல்லாவிட்டால் உன்னை இந்த இடத்திலே புதைத்து விடுவேன்.

**காட்சி - 6**
**(துருபதனைக் கட்டிக்கொண்டு வருதல்)**

**துரோணர்**
ஏன்ன பார்க்கின்றாய் துருபதா என்னத்தப் பார்க்கின்றாய். துருபதா இவ்வளவுதானா உன்னுடைய வீரம். (ஏளனத்தோடு சிரித்தல்) எனது சீடர்கள் உன்னைக் கட்டிக்கொண்டு எனது காலடியில் போட்டிருக் கிறார்களே. என்ன வாழ்க்கையடா?

**துருபதன்**
என்னை மன்னித்துவிடுங்கள். துரோணரே நான் அரசனானதால் ஆணவம் கைகூடப்பெற்று அறிவிழந்தேன்.

**துரோணர்**
நான் உன்னைக் காண்பதற்கு வந்தபோது அரசனுக்கும் ஆண்டிக்கும் எப்படிச் சினேகிதம் என்று கேட்டாயே?

**துருபதன்**

காலக்கொடுமை என் கண்ணை மறைத்துவிட்டது நண்பா கண்ணை மறைத்துவிட்டது.

**துரோணர்**

துருபதா இப்போது நீ அனைத்தையும் இழந்து ஆண்டிக்கோலத்தில் நிற்கின்றாய். பறவாயில்லை பாஞ்சால தேசத்தின் ஒரு பகுதியினை உனக்குத் தருகின்றேன். மறுபகுதிக்கு நான் உரிமையாளன். இப்போது இருவரும் சமம்தானே.

**துருபதன்**

(துரோணாச்சாரியாரை மனவருத்தத்துடன் பார்த்தல்)

**துரோணர்**

என்ன அப்படிப் பார்க்கின்றாய். உனது நாடு எனக்கு வேண்டாம். முழுநாட்டுக்கும் நீயே அரசனாயிரு. நன்றி மறந்த உனக்கு இது நல்லதொரு பாடமாக இருக்கட்டுமட?

# கிருட்டிணன் தூது

(ஒரு காட்சியில் நாடகம் இடம்பெறும்)
(ஐவருடன் துரோபதை இருக்கின்றாள்)

**அருச்சுனன்**

அண்ணா நமக்கு வனவாசம் முடிந்துவிட்டது. நாம் இனி நாட்டினை ஆழவேண்டும்.

**வீமன்**

துரியோதனன் மனம் திரும்பாமல் எமக்குத் தந்த வாக்கை அலட்சியம் செய்து எம்மை கொல்ல நினைககின்றான். இனியும் தாமதித்துப் பயனில்லை அவனுடன் போர் செய்வதுதான் உறுதி.

**நகுலன்**

விட்டுக்கொடுத்தோம், வீட்டை இழந்தோம், நாட்டை இழந்தோம், வீறுகொண்ட நடையை இழந்தோம், சொந்தம் சுற்றமெல்லாம் துயருற நின்றோம். துரியோதணன் திருந்தவில்லை அவனைப் போர்க்களத்தில் சந்திப்போம்.

**சகாதேவன்**

நாம் என்ன சொன்னாலும் நடப்பதுதான் நடக்கும் எல்லாவற்றிற்கும் கிருஷ்ணர் இருக்கின்றார். அவர் நினைத்ததுான் நடக்கும்.

**தருமர்**

தருமமே வெல்லும் தருமம் என்றும் தோற்பதில்லை. தலைவிதிம் பொய்ப்பதில்லை. எமக்கு அஞ்ஞானவசம் முடிந்துவிட்டது. போர் செய்வதற்கு முன்பாக ஒரு தடைவை கிருஷ்ணரைத் தூதாக அனுப்புவோம்.

**(கிருஷ்ணர் வருதல்)**

**கிருஷ்ணர்**

ஐவரும் தங்கை பாஞ்சாலியும் ஒன்றாகக்கூடி இருக்கின்றீர்களே. ஏதோ மனச் சங்கடத்துடன் இருப்பதுபோல் தெரிகின்றது.

தருமர்
ஒன்றுமில்லை கிருஷ்ணா? துரியோதனன் நாட்டினைத் திருப்பிக் கொடுக்க மறுத்தாலும் யுத்தம் செய்யவே எண்ணங்கொண்டிருந்தாலும் நாமும் அறநெறி கடந்து யுத்தம் செய்யத் துணிதல் நீதியாகாது. ஆககையால் துரியோதனண் கருத்தை நன்கறியவல்ல உம்மை தூதாக அனுப்புவதற்கு சித்தங்கொண்டுள்ளோம்.

கிருஷ்ணர்
நல்ல யோசனை நானும் அதனைத்தான் யோசித்திருந்தேன்

வீமன்
முடியாது, பாஞ்சாலியைத் துயிலுரிந்து மானபங்கப் படுத்தியபோதும் எங்களை மௌனமாக இருக்குமாறு பணித்தாய். இப்பொழுதும் நாங்கள் இவ்வளவு அவமானம் அடைந்திருக்கும் போதும் சமாதானத்தை விரும்புவது அழகாகாது.

தருமர்
குற்றமது பாக்குங்காற் சுற்றமில்லை. ஆகையால் சகோதரர்களுடன் கூடி வாழ்வதை விடுத்து அவர்களுடன் பகைக்கின் அது வசையாகாது. துரியோதனாரியார் எங்கள் சகோதரர்கள். அவர்கள் எங்களுக்கு ஒரு குற்றம் செய்தால் மன்னித்து விடுவதுதான் உத்தமம். அண்ணன் தம்பிகளிடம் இப்படியும் பேதமுண்டாவது வழக்கந்தான். தன் கைவிரல் கண்ணிற் பட்டால் அதனை வெட்டி எறிவதா? ஆகையால் சமாதானமே தகுந்தது.

அருச்சுனன்
துரியோதனன் என்ன சொன்னாலும் கேட்கப்போவதில்லை. கிருஷ்ணன் தூதாகப்போனாலும் நமக்கு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை.

நகுலன்
இரந்து கேட்பது நமது வம்சத்திற்கு இல்லாத குணம். அது வசை. எங்கள் குலத்தில் உள்ளவர்கள் ஆண்மை படைத்தவர்கள். ஆகையால் நாமும் ஆண்மை குன்றலாகாது.

**சகாதேவன்**

யார் என்ன சொன்னாலும் என்ன என்னதான் நடந்தாலு மென்ன. கடைசியில் கிருஷ்ணன் நினைத்ததுதான் நடக்கும்.

**பாஞ்சாலி**

கண்ணா நாங்கள் எப்படி எப்படியெல்லாம் மானபங்கப்பட்டு இந்த நிலையில் இருக்கின்றோம். தாங்கள் தூது போய் சமாதானமானால் எனது சபதமும் அண்ணன் வீமனின் சபதமும் நிறைவேறாமல் போய்விடுமோ?

**கிருஷ்ணர்**

தங்காய், வீமா கவலைப்பட வேண்டாம் தங்களின் சபதம் நிறைவேற்றுவேன்.

**கிருஷ்ணர்**

அழகிய குருநாட்டினைப் பெறுவதற்கு விருப்பமா? ஆல்லது மறுபடியும் காட்டில்போய்த் துண்பப்பட விருப்பமா? அல்லது இடம்பெறப்போகும் யுத்தத்தில் யார் பிழைப்போம் என்ற எண்ணத்தோடு கோபங் கொண்டு போர் செய்வதற்கு விருப்பமோ? உங்களுடைய உண்மையானமனக்கருத்தென்ன.

**தருமர்**

அறத்தின் வடிவே, மறத்தை அழிப்பவனே, பகைமையாகிய தீ வளருமாக இருந்தால் உயர்ந்து வளர்ந்த மூங்கில் காடுகூட எரிந்து சாம்பலாகிவிடும். சினத்துடன் உக்கிர மாகப்போர் செய்தால் துரியோதனாரியாரும் நாமும் இறப்போம். அங்ஙனம் நிகழாது குருநாட்டில் நாங்கள் இருபக்கத்தவரும் கூடி வாழ்வதற்கு சமாதானம் உண்டாக நீ அவனிடம் தூது செல்வாயாக.

**கிருஷ்ணர்**

துரியோதனனிடம் இரண்டாமுறை சூதாடி நீங்கள் வெற்றி கண்ட அக்கணத்தில் அவனது கூற்றிக்கினங்க கொடிய வனஞ் சென்று திரும்பி விட்டீர்கள். இனியும் தங்களுக்குரிய பங்கினை அவன் தரமறுத்தால் அவனிடம் யுத்தம் செய்து நாட்டைப் பெறுவதுதானே முறை.

**தருமர்**

துரியோதனன் நிச்சயமாக நாட்டைத் தருவான். அப்படித் தரமறுத்தால் அதன் பின்னர் போர் செய்தாயினும் நாட்டைப்பெறுவோம். முதற்படி சமாதானத்தை மேற்கொண்டு அது நிறைவேறாதவிடத்து போர் செய்வது பழியுமாகாது.

**கிருஷ்ணர்**

நீங்கள் செய்யும் பெரும் போரின் பின்னர் பின்வாங்கிக் கானகம் சென்றால் இவ்வுலகத்தார் இகழ மாட்டார்களா? துச்சாதனன் அவையில் துயிலுரிந்தபோது நீங்கள் கூறிய சபதம் பொய்த்துவிடாதோ? நீங்கள் அவ்வாறு செய்வது அரசாட்சிக்கு அறமா?

**தருமர்**

துரியோதனனின் அத்தினாபுரிக்குச் சென்று குருநாட்டின் பாகத்தைத் தரும்படி கேள். அவன் அதனைத் தர மறுத்தானாகில் ஐந்து ஊர்களைத் தருமாறு கேள். அவன் அந்த ஊர்களையும் தரவில்லையானால் ஐந்து இல்லங்களைத் தருமாறு கேள். அவற்றையும் அவன் தரமறுத்தால் கொல்வதற்குரிய போரை வேண்டுவாயாக.

**வீமன்**

அடியாரின் குறையெல்லாம் நீக்கும் எம்பெருமானே? குற்றமற்ற இத்தருமர் மானமின்றி இவ்வாறு பேசுவதற்கு நாம் என்ன செய்வது. முன்னர் பாஞ்சாலியை சபையில் வைத்து கூந்தலை இழுத்து கொடுமைப்படுத்தியபோது அரசவையில் நாணம் கொண்டு அழுது புலம்பினாள் அப்போதே துரியோதனனையும் அவனைச் சேர்ந்தவர் களையும் போட்டுத்தள்ளியிருப்பேன். நீயோ எங்களைத் தனித் தனியாகத் தேற்றி கோபிக்கவேண்டாம் என்று சொல்லி நம் குலத்திற்கே உலகம் உள்ளவரை நீங்காத பழியை ஏற்படுத்தினாய். கொடிய காட்டில்பன்னிரெண்டு ஆண்டுகள் வாழ்ந்து வனவாசம் நிறைவு செய்து. பின்னர் ஓராண்டு மறைந்து அஞ்ஞானவாசம் இருந்தும் துரியோதனாரியர்களைக் கொல்வதற்கு அஞ்சுகின்றாய். முரசுக் கொடியை உயர்த்தியவனே பாம்புக்கொடியை உயர்த்திய துரியோதனனின் இரக்கமில்லாமைக்கு அங்சுவதைவிட அதிகமாக உன் அருளுக்கு அஞ்சுகின்றேன்.

**தருமர்**
சகோதரர்களுடன் கூடிவாழ்வதற்கு சமாதானமாக இருப்பதுதான் சிறந்த வழி.

**வீமன்**
கண்ணன் தூது செல்லவேண்டிய அவசியமில்லை. அங்கு சென்று அவர் அவமானப்படவும் வேண்டியதில்லை. வருந்தும் மங்கையாம் துரோபதையின் சபதம் என்சபதம் தவறாவண்ணம், நீதி தவறி சொன்னசொல் தவறிப்பேசும் துரியோதனனிடம் என்னைத் தூதாக அனுப்புவாயாக.

**அருச்சுனன்**
துரியோதனன் என்ன சொன்னாலும் கேட்கப்போவதில்லை. ஆகையால் கிருஷ்ணந்தான் தூது போனாலும் பலனொன்றும் கிடைக்கப்போவதில்லை. அவன் அங்கு பல சூழ்ச்சிகள் செய்ய முயற்சிப்பான். அவனைக் கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. உவர் நிலத்தில் நெல் விதைத்தால் அவை விளையப்போவதில்லை. பாம்புக்குப் பால் வைத்தால் அது விஷத்தையே கக்கும். எனவே துரியோதனனிடம் தூது சென்று அவனுக்கு புத்தி சொல்லிப்பல நில்லை.

**நகுலன்**
கிருஷ்ண பரமாத்மாவை வணங்கி, அருச்சுனனைக் கைதொழுது. வெற்றியுடைய அரசனே? சமுத்திரம் சூழ்ந்த ஏழு தீவுகளையுடைய பூமி முழுவதையும் பஞ்சபாண்டவர் பெறுவர் என்பது பொய்யோ? மனுதருமத்தில் ஆண்மை பற்றிச் சொல்லப்படவில்லையோ? இரந்து கேட்பது நமது குலத்திற்கு வசையாகாதோ அண்ணா, கிருஷ்ணர் தூது போனாலும் துரியோதனன் அரசு கொடுக்கப் போவதில்லை. மற்றைய அரசர்கள் எங்களை நகைக்காதவாறு யுத்தம் செய்வதுதான் சரி. தான் செய்ய வேண்டியதை உணராத துரியோதனன் பிறர் சொன்னாலும் கேட்கமாட்டான்.

**கிருஷ்ணர்**

நல்லது நகுலா, அமர்ந்துகொள். நகுலன், அருச்சுனன், வீமன் கூறிய வாத்தைகளைக் கேட்டாய் உன் கருத்தென்ன சகாதேவா.

**சகாதேவன்**

நீ தூது போனாலென்ன போகாவிட்டாலென்ன. துரியோதனன் நாடு தந்தால் என்ன தராவிட்டாலென்ன. துரோபதை கூந்தலை முடிந்தாலென்ன முடியாவிட்டாலென்ன. கடைசியாக எப்படி முடியுமென்று நான் எவ்வாறு அறிவேன். கிருஷ்ணா உனது பால்ய லீலைகள் போன்று என்ன திருவிளையாடல்களை இன்னும் நிகழ்த்த இருக்கின்றாய் என்பதை நான் அறிவேன். ஆகையால் உன் கருத்துக்கு நானும் சம்மதிக்கின்றேன்.

**கிருஷ்ணர்**

(அதிசயத்தோடு)

சகாதேவா பாரதப்போரைத் தடுப்பதற்கு ஒரு வழிசொல்

**சகாதேவன்**

துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் தொழில் உன்னுடையது. இவ்வுலகில் தீயோரை அழித்து பூமியின் பாரத்தைப் போக்குவதற்காக இப்பாரதப்போரைச் செய்து முடிக்க நீ ஏற்கனவே திட்டமிட்டுள்ளாய். ஆகையால், அதற்குக் காரணனாகவுள்ள உன்னையன்றி வேறு யாரால் இப்போரைத் தடுக்கமுடியும். அப்படியென்றால் அருச்சுன னைக்கொன்று கர்னனுக்கு பட்டஞ் சூட்டி, திரோபதையின் கூந்தலைக் கழைந்து உனது கால்களில் விலங்கு பூட்டி கட்டிவைத்தால் பாரதப்போர் நிகழாது. கிருஷ்ண பரமாத்மாவே உன் லீலைகளை யெல்லாம் நான் அறிவேன் பாரதப்போரில் எங்களைக் காத்துவைக்க வேண்டும்.

**கிருஷ்ணர்**

சகாதேவா நாம் பேசிக்கொண்ட வாத்தைகளைப் பிறரிடம் சொல்லாதே.

**சகாதேவன்**

சமாதானமே விரும்பத்தக்கது

கிருஷ்ணர்

(திரோபதையைப் பார்த்து) கிருஷ்ணர் சகாதேவன் சொன்னதுதான் சரியானது. சமாதானமின்றி எதுவும் நடக்காது.

திரோபதை (அழுதுகொண்டு)

கிருஷ்ண பரமாத்மாவே பிரகலாதன் அழைக்க உதவிக்கு வந்தாய், கஜேந்திரன் என்ற யானை அழைத்தபோதும் அங்கு தோன்றினாய், துச்சாதனன் துயில் உரிந்தபோது துணியாக நீயல்லவா வந்து உதவினாய். பாண்டவர்களும் உண்மை, உயர்வு, சிறப்புக்காக்க வேண்டிய பெரிய கடமையுடையவர்கள் அவர்கள். ஆகையால் எனது சாபத்தைக் காப்பாற்ற நீ உதவ வேண்டும்.சமாதானம் செய்து விட்டால் நான் சொன்னபடி கூந்தலை முடிக்கமுடியாதே.

கிருஷ்ணர்

நான் இப்போது தூது போய்த் திரும்பியவுடன் உனது கூந்தலை முடிவேன். நானே முடித்து வைக்கின்றேன்.

# தான்தோன்றும் அப்பன்

**(வடமோடி நாட்டுக்கூத்து)**

**காட்சி - 1**

**கட்டியகாரன் வரவு**

கட்டியகாரனும் வந்தேனே தான்தோன்றும் அப்பன் புகழ்பாட
கட்டியகாரனும் வந்தேனே
கட்டியகாரனும் வந்தேனே தான்தோன்றும் அப்பன் புகழ்பாட
கட்டியகாரனும் வந்தேனே
கட்டியகாரனும் வந்தான் கைதனில் பிரம்பு துண்ண
மட்டில்லாப் புகழ்பேசி அப்பனின் புகழ்பாட

(கட்டி)

சிறக்கநடை நடந்து சிலுப்பாய் ஒதுக்கிவிட்டு
பறக்கமுளித்து பதுங்கி ஒதுங்கிக்கொண்டு

(கட்டி)

வட்டமுண்டாசு கட்டி வண்ணப்பிரம்பு தாங்கி
திட்டமுடன் நடைநடந்து சிலுக்கிமெலுக்கிக்கொண்டு

(கட்டி)

பக்தியுடன் இறைவனைத் துதியுங்கோ என்றும்
பண்புடன் நடக்கப் பழகுங்கோ
முத்திபெறலாம் எல்லோரும் என்றும்
மூலமூத்தியை வணங்குங்கோ

ஆண்டவன் செயலைப் பார்க்க நீங்க
அடுத்தவருக்கு உதவி செய்யுங்கோ
தான்தோன்றும் அப்பனை வணங்கி நீங்க
வேண்டும் வரந்தனையும் பெற்றிடுங்கோ

**வசனம்**

தூன்தோன்றும் அப்பனின் அரிய பெரியசெயலைச் சொல்லப்போறோம் எல்லாரும் கவனமாய் இருந்து கேட்டுங் கொள்ளுங்கோ.

காட்சி - 2

வேடர் விருத்தம்

கானக வேடர்களாய் நாம் காலா காலம் வாழ்கின்றோம் இங்கு
மானமுடன் வேட்டையாடி மனசந்தோஷம் கொண்டும்
கொக்குமுதல் குருவி ஈறாக திக்கெங்கும் வேட்டையாடி
பக்குவமாய் குடும்பத்தையும் வக்கனமின்றி காத்துக்கொண்டு
நக்கல் நையாண்டியின்று நாவையும் அடக்கிக்கொண்டு
நடைநடையாய் காடுகளை நன்களர்ந்துகொண்டு
மடமான்கள் பல எய்து மன சந்தோசம்கொண்டு
திடமாக வாழ்கின்ற திகடன் குழு நாங்களே.

வேடன் - 1

வேடனும் வந்தேனே வேட்டையாடும் வேடனும் வந்தேனே
ஆடமாய் வில்லம்புகொண்டு அரிய வனம் சென்று
முடமானை எய்யவென்று மனதில் எண்ணிக்கொண்டு

வேடன் - 2

தேனும் எடுப்போமே நல்ல தேவைக்கு வேட்டையுமே
தோகை மயிலுக்கும் தொடுப்போமே வில்லம்பு
பாகைபாகையாய் பலபல வேட்டையாடுவோம்

வேடன் - 3

மானையும் எய்வோமே மட மங்கையையும் கொய்வோமே
தானையாய் நின்று தடம்புரள மாட்டோம்
கானகமெல்லாம் கனக்கும் வைப்போமே

வேடன் - 1

கானக வேடர்களாய் காலாகாலம வாழ்கின்றோம்
தீண்பண்டமெல்லாம் தித்திக்கும் காட்டிலே
தின்னமாய் எடுத்துத்தான் தின்போமே அதனையும்

வேடன் - 2

கொக்கட்டி மரத்திலண்ணா நல்லா தேனும் மனக்குதண்ணா
கொத்துவோம் கோடாரியால் கொப்பளிக்கும் தேனுமே
மெத்தவும் திண்போம் மொத்தமாய் நாங்களே

**வேடன் - 3**
இரத்தம் மனக்குதன்னா இதுவென்ன அதிசயமோ
வருத்தமாய் இருக்குது வாட்டுது மனதையும்
நிறுத்த வழியிதுக்கு என்ன இருக்குது

**வேடன் - 1**
என்ன செய்வோமே நம்ம ஏது செய்வோமே
மண்முனையிலே அரசு இருக்காவாம்
முன்னமே சென்று முறையிட்டு வருவோமே

**காட்சி - 3**
**(வேடர்கள் உலகநாச்சியிடம் வருதல்)**

**வேடன் - 1**
சரணம் சரணமம்மா உலகநாச்சி தாயே சரணமம்மா
சரணமம்மா சரணமம்மா தாயே உன்பாதம்
காண்போமே 'காட்சியும் கானகம் தன்னிலே

**வேடன் - 2**
கானக வேடர் நாங்கள் காலகாலமாய் வாழ்கின்றோம்
வேட்டைத் தொழிலை நாங்கள் விரும்பியெ செய்கின்றோம்
வீண் வம்பு இல்லாமல் வீறாப்புக்கொள்கின்றோம்

**வேடன் - 3**
கானகம் தன்னிலே கனத்ததூரம் சென்றோம்
தேனுள்ள மரமாக கொக்கட்டி மரத்தையும்
கோடாரியால்கொத்த குரதியும் வழிந்ததே

**வேடன் - 1**
வியந்து போனோமே தாயே அம்மா வேடர்கள் நாங்களுமே
விந்தையான செயல் எங்கள் வாழ்வில் கண்டு
சிந்தையும் மயங்கியே சித்திரமாயபனோம்

**உலகநாச்சி**
சரியாகப் பார்த்தாயோ திகடா வேடா புரியாமல் பேசிறாயோ
மரத்துச்சாறாக இருக்கத்தான் முடியாதோ
மண்ணின் தன்மையாக சிலவேளை இருக்குமே.

**வேடன் - 1**
இரத்தவாடையம்மா வீசிறது மூக்கையும் துளைக்கிறது
எத்தனை நிகழ்வுகள் இந்த வனந்தன்னில்
அத்தனையும் கண்டு அதிசயம் வரவில்லை

தாயே சங்கரியே நாங்கள்தான் நன்றாகப் பார்த்தோமம்மா
குருதி வெகுரம்மா பரவியும் வருகுது
பருதி எல்லாமே சுழன்று திரியுது

**வேடன் - 1**
வாருங்கள் போய் வருவோம் அந்த இடம் பார்த்துமே வந்திடுவோம்
ஆட்சிப்புலத்தினுள் அறியாத செயலொன்று
குருதியும் ஓடுதா கொக்கட்டி மரமொன்று

**காட்சி - 4**
**(உலகநாச்சியுடன் வேடர்கள் லிங்கம் தோன்றிய இடத்திற்கு வருதல்)**

**உலகநாச்சி பாடல் - 1**
இந்த வனந்தன்னில் இந்த சிவலிங்கம் எப்படி வந்ததோ
தானாகத் தோன்றியே தான்தோன்றும் லிங்கமாய்க் காட்சியும் தந்தாரே

**உலகநாச்சி பாடல் - 12**
மரத்தில் குருதி வழிந்ததைக் கண்டு மயங்கியே நின்றோமே
மாயமான செயல் இதுவென்று நாங்கள் தியங்கியே நின்றோமே

**உலகநாச்சி பாடல் - 3**
எந்தன் ஆட்சியில் இப்படி நடக்குத மகிழ்ச்சியும் அடைந்தோமே
மக்களைக் கூட்டியே மாபெரும் கோயிலை எழுப்பியே விடுவேனே

**உலகநாச்சி பாடல் - 4**
முப்பிறவி செய்த பயனுக்குப் பலன்நான் இப்பிறவியில் கண்டோம்
தாயே சீதெவி தரனியில் நிலைக்கவே வாழ்வாய் அம்மாவே

**உலகநாச்சி பாடல் - 5**
இந்த உலகில் இப்படிச் செயலொன்று எங்கும் நடக்கவில்லை
எங்கள் சிவனார் தான்தோன்றும் அப்பனாய் காட்சியும் தந்தாரே

**காட்சி - 5**

**குருக்கள் விருத்தம்**
அரகரா சிவமே எங்கள் ஆரணப்பொருளெ போற்றி
ஆணவம் அடகியாண்ட எங்கள் ஆதியும் அந்தமும் போற்றி
காரணப்பொருபோற்றி கன்மவினை அறுபாபாய் போற்றி
மூலமும் முதலுமாய் நின்று முப்புரம் எரித்தவா போற்றி
பாவமம் அழ்ப்பாய் போற்றி பாரையும் ஆள்வாய் போற்றி
ஞாலத்தின் தலைவா போற்றி ஞான நாயகனே போற்றி
தான்தோன்றும் அப்பா போற்றி வேண்டும் வரந் தருவாய் போற்றி
கொக்கட்டி மரத்தில் உறையும் குருநாதா போற்றி போற்றி

**குருக்கள் பாடல் - 1**
அரகரா சிசசிவமே எங்களை நீயும் ஆள்வாயேஅதிபதியே
குருவாக வந்து அன்று குருந்த மரத்தடி இருந்தவரே

**குருக்கள் பாடல் - 2**
ஆதிபரம்பொருளெ எமையாளும் சோதிவடிவம் நீயே
ஆதிபகவனாய் ஆணவம் அடக்கி ஆண்டவரே

**குருக்கள் பாடல் - 3**
அடியவர் குறைதீர்க்க அன்று பிரம்படி பட்டவரே
கொக்கட்டிமரத்தில் எழுந்த முக்கண்ணன் மூத்தியே

காட்சி - 6

(போர்த்துக்கேயர் கோயிலுக்குள் வருதல்)

**போர்த்துக்கேயர் பாடல் - 1**

யாரடா அங்கே நிற்கின்றாய் வாவடா இங்கேதான்
ஏதடா இயம்புவாய் என்ன இதுவென்று (2)
பூசை பனக்காரம் எதுக்கடா கல்லுக்கு

**போர்த்துக்கேயர் பாடல் - 2**

கல்லுக்குப் பூசை செய்றாயோ புல்லுத் தின்னுமா இதுவடா
பொல்லால் அடித்தால் எழுந்ததான் ஓடுமா (2)
ஏனடா சொல்கின்றாய் இயம்படா இப்போது

**போர்த்துக்கேயர் பாடல் - 3**

சானியும் இதுபோடுமா பாணியும் வைக்கின்றாய்
ஏனினி இங்கே நிற்கின்றாய் குரக்களே (2)
இயம்புவாய் இப்போது உன்மையும் வெளிப்பட

**போர்த்துக்கேயர் பாடல் - 4**

கோரியை எடுப்போம் இப்போ கோயிலை இடித்துடப்போம்
கொலுவுடன் வாங்கோ கொத்தி உடைப்போமே (2)
குரக்களை வெருட்டி பொருட்களை எடுப்போம்

**குருக்கள் பாடல்**

கல்லுப் புல்லு திண்ணுமையா
கட்டாயமிது நடக்குமையா
காலாகாலன் இங்குதானே
ஆலயமாக எழுந்துமுள்ளான்

**குருக்கள் பாடல்**

இன்று வெள்ளிக் கிழமையையா
அடுத்த வெள்ளி வாருமையா
கல் நந்தி எழுந்து வருமே
புல்லும் தின்று சாணம் போடும்

**குருக்கள் பாடல்**
நிச்சமாக நடக்குமையா
நீங்கள் இதனை உணர்ந்திடுவீர்
தப்பாமல் நீங்கள் வாங்கள்
தான்தோன்றும் அப்பன் வருவார்

**வசனம்**
கோளுங்களையா நீங்ள் அடுத்த வெள்ளி
வாருங்கள் கல்லு புல்லுத் திண்ணும்.
ஆதனை நீங்கள் நேரிலே காணமுடியும்.

**போர்த்துக்கேயர் பாடல் - 4**
கதையை நம்பித்தான் செல்கின்றோம்
உதையில் இருந்து தப்பித்தாய்
உடைப்போம் கோயிலை உன்கதை பொய்த்தாலே
கடைசியில் வருவோமே காத்தும் இருந்திடு

**வசனம்**
கேளடா குருக்களே நாங்கள் சென்ற இடங்களிலெல்லாம் இப்படி அபகாசம் கேட்டதில்லை. கோயிலை இடித்து நொறிக்கினோம். ஏனோ இங்கு அந்த மனம் வரவில்லை. அடுத்த வெள்ளி வருகின்றோம் குருக்களே.

**குருக்கள் விருத்தம்**
போற்றி போற்றி எங்கள் குலங்காத்த பொருளே போற்றி
போர்த்துக்கேய படைத்தலைவன் புரியாத மொழியில் பேசி
புல்லுத் திண்ணுமா கல்நந்தி என்று அதட்டியே பிதட்டினானே
நேட்டூரப்படுத்துவார்கள் ஆடுத்தவெள்ளி வாருமப்பா

**குருக்கள் பாடல் - 1**
தான்தோன்றும் அப்பா சரணம்
நான் என்ன செய்வேன் இப்போ
கெடுவார்கள் வந்து இங்கு
கேடு நினைத்துச் சென்றுள்ளார்கள்

**குருக்கள் பாடல் - 1**
கோயிலை இடிப்பார்களே
நாயினும் இழ்வாய் நடத்துவார்களே
நானும் ஓடிப்போறேன் அப்பா
நீயும் ஓடி வருவாயப்பா

**சிவன் விருத்தம்**
கவலைப்பட வேண்டாம் நீயும் கட்டாயம் காட்சி தாறேன்
து்'டரெல்லாம் மறைவார்கள் துண்பங்கள் பறந்தோடும்
இந்தா கந்தாவென்று என்னையும் கூப்பிட்டாலே
எழுந்துவாறேன் நானும் எண்ணிய கரமம் முடியும்

**போர்த்துக்கேயர் விருத்தம்**
என்ன செய்கின்றாய் குருக்களே
எழுந்துவரச் சொல்லும் இப்போ
முன்னமே சொன்ன வாத்தைகள்
திண்ணமாய் நடக்குமோ இன்று

மண்ணிலே உள்ள நந்தி
அம்மாவென்று அலறுமா இங்கே
சாணமும் போடுமென்றாய்
காட்டுவாய் உடனே இன்று

**குருக்கள் பாடல்**
(வேகமாக)
இந்தா கந்தா எழுந்துவாடா இப்ப நீயும் ஓடிவாடா
துப்பாமலே புல்லைத் திண்று இப்பபோடு சாணத்தையும்
ஓடிவாடா ஓடிவாட ஓடிடட்டும் கேடிகள்
தேடித் திண்ணு புல்லையும் கெடியதனம் உடையட்டும்
(நந்தி புல்லுத் திண்று சாணம் பேடல்)

**குருக்கள் தேவாரம்**
தான்தோன்றும் அப்பா ஓலம்
தன்னிகர் பொருளே ஓலம்

தேவர் தனைக் காத்தவா ஓலம்
திருவெண்ணீறனிவா ஓலம்

அசுரர்களை அழித்தவா ஓலம்
அண்டரண்டப் பொருளே ஓலம்
அரபணிந்த மார்பா ஓலம்
அகிலத்தை ஆள்பாய் ஓலம்

அபயம் கொடுப்பாய் ஓலம்
பகைவரை அழிப்பாய் ஓலம்
அங்கயற் கண்ணா ஓலம்
கங்கையில் வருவாய் ஓலம்

கைலையை ஆள்வாய் ஓலம்
காயாம்பூ மார்பா ஓலம்
கொக்கட்டி மரத்தில் வந்தவா ஓலம்
கொடுவினை அழிப்பாய் ஓலம் ஓலம்

**போர்த்துக்கேயர் விருத்தம்**
அப்பனே சிவனே பரம்பொருளே அபயம்
ஆதிதயாபர அதிபெரும் பொருளே அபயம்
அடியவரைக் காப்பாய் அபயம்
கோடியவரை அழ்த்த கொன்றை வேந்தா அபயம்

முப்புரம் எரித்த முதல்வா அபயம்
தப்பாகப் பேசிய எங்களைக் காப்பாய் அபயம்
திக்கெட்டும் ஆழ்வாய் அபயம்
திவ்யப் பிரகாசனே அபயம் அபயம்

**போர்த்துக்கேயர் வசனம்**
சரணமையா குருவே சரணம். நாங்கள் காணாத இறையன்பை இங்கு கண்டோம் எங்களை மன்னித்தருள வேண்டுமையா சரணம்.

MSW

Hare Printers, Colombo - 06. Tel : 0773165557